# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 3 புதன்கிழமை (20-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 265


## சோதனை நடவடிக்கைகளை பொலீஸாரே செய்ய வேண்டும்

### ஊர்காவற்றுறை நீதிவான் பணிப்புரை

யாழ்ப்பாணம்,ஓக.20

சிவில் நிர்வாகம் சீராக மேற்கொள்ளப்பட வேண்டுமானால், பொதுமக்களைச் சோதனை செய்யும் பணிகள் பொலீஸாராலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி சிவநிதி நல்லசேகரம் உத்தரவிட்டுள்ளார்.

தீவகத்துக்குச் செல்லும் பாதையில் பண்ணை, அல்லைப்பிட்டி ஆகிய சோதனை நிலையங்களில் படையி

(12ஆம் பக்கம் பார்க்க)

### நெடுந்தீவுக் கடற்பரப்பில் ஊடுருவிய

## 17 படகோட்டிகள் விளக்கமறியலில்! ஏனைய தமிழக மீனவர் விடுதலை!!

யாழ்ப்பாணம்,ஓக.20

இலங்கைக் கடற்பரப்பில் ஊடுருவிய இந்திய மீனவர்கள் 17 பேரை எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி சிவநிதி நல்லசேகரம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை நெடுந்தீவுக் கடற்பகுதிக்குள் ஊடுருவிய சமயம், அப்பகுதி மீனவர்களால் பிடிக்கப்பட்ட 60 இந்திய மீனவர்களில் படகோட்டி

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்; ஐ.நா.சிறப்புப் பிரதிநிதி உயிரிழப்பு!



டிமெலோ

பக்தாத்,ஓக.20

ஈராக்கியத் தலைநகர் பக்தாத்தில் உள்ள ஐ.நா.அலுவலகக் கட்டடம் நேற்றிரவு தற்கொலைத் தாக்குதலில் தகர்ந்தது. இதில் ஈராக்கிற்கான ஐ.நா. சிறப்புப் பிரதிநிதி செர்ஜியோ வியெரா டிமெலோ (வயது 55) உட்பட 15 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 40 பேர் காயமடைந்தனர்.

உள்ளூர் நேரப்படி பிற்பகல் 4.40 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 'டிரக்' ஒன்றில் வெடிபொருள்களை ஏற்றிக்கொண்டு வந்து ஐ.நா. அலுவலகக் கட்டடத்தின் மீது மோதி தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக்கிற்கான ஐ.நாவின் சிறப்புப் பிரதிநிதியின் அலுவலக அறை இருந்த பகுதியில் தற்கொலைத் தாக்குதலாளி தான் செலுத்தி வந்த 'டிரக்'கை மோதினார். இதில் அந்த 3 மாடிக் கட்டடத்தின் ஒரு பகுதி முழுவதும தகர்ந்து விழுந்தது. இந்த இடிபாடுகளுக்குள் ஐ.நா. சிறப்புப் பிரதிநிதி சிக்கி உயிரிழந்தார். தாக்குதல் இடம் பெற்ற சமயம் அக்கட்டடத்தில் செய்தியாளர் மாநாடு நடந்து கொண்டிருந்ததாகவும் -

(12ஆம் பக்கம் பார்க்க)



# முஸ்லிம்களின் அபிலாஷைகளுக்கும் இடைக்கால நிர்வாகத்தில் உரிய இடம்

## பாரீஸ் புறப்படும் முன்னர் தமிழ்ச்செல்வன் அறிவிப்பு

கிளிநொச்சி,ஓகஸ்ட்20

**"தமிழீழத் தாயகத்தில் வசிக்கின்ற சகல மக்களுக்கும் உரியதான இடைக்கால நிர்வாகம் ஒன்றையே புலிகள் கோருகின்றனர். எனவே, அந்த நிர்வாக அலகில் அத்தாயகத்தில் வசிக்கும் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளும் பூர்த்தி செய்யத்தக்க வகையில் கருத்தில் எடுக்கப்படும்".**

**- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.**

இடைக்கால நிர்வாக அலகு தொடர்பாக பாரீஸில் சட்ட நிபுணர்களுடன் கலந்தாலோசனை செய்வதற்காகப் புறப்பட்டுச் செல்ல முன்னர் இந்த அறிவிப்பை அவர் விடுத்தார்.

அரசு முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக அலகு குறித்து சட்ட நிபுணர்களுடன் ஆராய்ந்து திருத்தம் ஒன்றைச் சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ள புலிகள், இவ்விடயம் குறித்து பிரான்ஸ தலைநகர் பாரிஸில் சட்ட அறிஞர்களுடன் நாளைமுதல் பத்து நாள்கள் கலந்தாலோசனைக் கூட்டங்களை நடத்தவிருக்கின்றனர்,

அக்கூட்டத் தொடரில் பங்குபற்று

(12ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று பாரீஸுக்கு புறப்படும் சமயம் எடுக்கப்பட்ட படம்.

## புலிகளின் குழு பாரீஸ் புறப்பாடு

கிளிநொச்சி,ஓக.20

இடைக்கால நிர்வாகம் தொடர்பான அரசின் வரைவு குறித்து சட்ட வல்லுநர்களுடன் ஆராய்வதற்காக பிரான்ஸ் செல்லும் விடுதலைப் புலிகளின் குழுவினர் நேற்று மாலை கொழும்பைச் சென்றடைந்தனர். இன்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து இக்குழு பாரீஸுக்குப் புறப்படவிருந்தது.

விடுதலைப் புலிகளின் அரசியல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் உறுப்பினர்கள் இருவர் முகமாலையில் படையினரால் கைது

விடுதலைப் புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த இருவர் நேற்று முகமாலை சோதனைச் சாவடியில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கந்தசாமி புகழ்மாறன், யோகராஜா மாயவன் ஆகியோரே கைதுசெய்யப் பட்டவர்கள் ஆவர்.

இவர்கள் படையினரால் கொடிகாமம் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர், சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு தற்போது யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பிரஸ்தாப புலிகள் இருவரும் மானிப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் முஸ்லிம்களின் பாதுகாப்பை பலப்படுத்த அரசு உடனடி உத்தரவு!

### நேற்றைய உயர்மட்ட மாநாட்டில் முடிவு

கொழும்பு,ஓக.20


கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கும் மக்களின் அன்றாட வாழ்க்கையை சகஜ நிலைக்குக் கொண்டு வருவதற்கும் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்கு நேற்று உத்தரவிட்டார். இது தொடர்பாக குறுகிய கால, நீண்டகால திட்டங்களை நடைமுறைப்படுதுவதெனவும் அமைச்சர் மாரப்பன தீர்மானித்திருக்கிறார்.

கிழக்கு மாகாண நிலைமைகள் குறித்து நேற்றுக்காலை கொழும்பில பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற ஓர் உயர்மட்ட மாநாட்டிலேயே அமைச்சர் மாரப்பன மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்தார்.

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பைப் பலப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளும் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்று பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன, இக்கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமிடம் உறுதியளித்திருக்கிறார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் திருகோணமலை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸர் தௌபீக், எம்.எஸ்.தௌபீக் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். அமைச்சர் திலக் மாரப்பனவுடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின பெர்னாண்டோ, இராணுவத் தளபதி லயனல் பலகல்ல, கடற்படைத் தள

(12ஆம் பக்கம் பார்க்க)

# அரசு பாதுகாப்பு வழங்கத் தவறினால் ஆயுதம் ஏந்த முஸ்லிம் இளைஞர்கள் தயார்

## கொலைகளுக்கு மு.காவும் பொறுப்பு என்கிறார் பேரியல்

கொழும்பு,ஓக.20

கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் அப்பாவி மக்களின் படுகொலைகளுக்கு அரசாங்கமும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுமே பொறுப்பேற்க வேண்டும். புலிகளுக்கு இப்படுகொலைகளுடன் தொடர்பு இல்லையென்றால் கொலையாளிகள் எவரென கண்டறிய வேண்டும்.

தேசிய ஐக்கிய முன்னணி(நுஆ) தலைவி பேரியல் அ[illegible] நேற்று நண்பகல் நாடாளுமன்றக் [illegible]ழு அறையில் நடைபெற்ற [illegible]ர் மாநாட்டில் இவ்வாறு கூறினார்.

கிழக்கில் முஸ்லிம் மக்களுக்குப் போதிய பாதுகாப்பை அரசு வழங்கத் தவறினால் எமது முஸ்லிம் இளைஞர்களும் ஆயுதம் ஏந்திப் போராடத் தயாராகவே உள்ளனர். இதனைத் தவிர்க்க முடியாது. எமது இளைஞர்கள் ஏற்கனவே புலிகள இயக்கத்துடனும், ஏனைய அமைப்புக்களுடனும் இணைந்து செயற்பட்டவர்கள். போர் பயிற்சிகளைப் பெற்றவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது எனவும் பேரியல் அஷ்ரப் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன, சேகு இஸ்ஸதீன் ஆகியோரும் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கூறுகையில், "அரசும் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டபோதே நாம் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு குறித்து குரல் எழுப்பினோம். ஆனால், அரசுடன் இணைந்து செயற்படும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் சம்பவங்கள் நடைபெறும் போது கூச்சலிடுகின்றனர். பிரதமருடனும் சம்பந்தப்பட்டவர்களுடனும் பேச்சு நடத்துகின்றனர். ஆயினும், அவர்றால் எதுவித நன்மையும் ஏற்படவில்லை, அரசுக்கு எதிராக குரல் எழுப்பும் துணிச்சல் முஸ்லிம் காங்கிரஸுக்கு கிடையாது" என்றார்.

"சம்மாந்துறை பிரதேசத்தில் நூறு சதவீதம் முஸ்லிம் மக்களே வாழ்கின்றனர். அங்கு வந்து எவ்வாறு புலிகள் படுகொலைகளைச் செய்யமுடியும்" என செய்தியாளர் ஒருவர் கேள்வியெழுப்பினார்.

அதற்கு பதிலளித்த பேரியல் அஷ்ரப் இதில் சந்தேகத்திற்கிடமில்லை. முன்பிருந்த வீதித் தடைகளும், பாதுகாப்புச் சோதனைச் சாவடிகளும் முற்றாக நீக்கப்பட்டுள்ளன. இதனால் புலிகள் தாராளமாக நடமாடமுடிகிறது என்றார்.

அரசாங்கமே வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் மேலதிகப் படைகளை பாதுகாப்பில் ஈடுபடுத்த வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார். (ஓ)

## அம்பாறை பகுதிகளில் பூரண ஹர்த்தால் வழமை நிலை முற்றாகச் சீர்குலைந்தது

### சம்மாந்துறை சம்பவத்துக்கு எதிர்ப்பு; அசம்பாவிதங்கள் இல்லை

அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் வழமை நிலை முற்றாகச் சீர்குலைந்தது. சம்மாந்துறையில் இரு முஸ்லிம்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஹர்த்தால் மேற்கொள்ளப்பட்டது.

கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, பொதுவில், சாய்ந்தமருது, நிந்தவூர் மருதமுனை உட்பட பல இடங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. கடைகள பூட்டப்பட்டு வாகனப் போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டிருந்தன. வீதிகள் வெறிச்சோடின.

அரச அலுவலகங்கள், வங்கிகள் என்பன திறக்கப்படவில்லை. பாடசாலைகள் இயங்கவில்லை.

அட்டாளைச்சேனை பிரதேசத்திற குட்பட்ட ஒலுவில், பாலமுனை பிரதான வீதிகளில் பொதுமக்களால் தடைகள் இடப்பட்டிருந்தன. அட்டாளைச்சேனை தைக்கா நகர், தபால் கந்தோரடி வீதிகளில் குறுக்கே கம்பி வேலிகள் இடப்பட்டு தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. வீதிகளில் ஆங்காங்கே ரயர்களும் எரிக்கப்பட்டன.

வாகனப் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்ததால் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், தேசிய கல்விக் கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை, பிரதேச செயலகம் போன்றவற்றில் கடமை புரியும் ஊழியர்கள் வேலைகளுக்குச் சமுகம் கொடுக்கவில்லை.

ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்தவர்களால் அக்கரைப்பற்று வீதிகளில ரயர்கள் எரிக்கப்பட்டதுடன் மரக்குற்றிகள், கொங்கிறீட் தூண்கள் போட்டு தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

முஸ்லிம் கிராமங்களில் பதற்ற சூழ்நிலையே காணப்பட்டது. சில இடங்களில் இளைஞர்கள் கூட்டம், கூட்டமாக நின்று வீதியில் நடமாடுவோரைத் திருப்பியனுப்பினர்.

ஒரு சில கல்லெறிச் சம்பவங்களை விட வேறு அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர்.

பொலீஸாரும் விசேட அதிரடிப் படையினரும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் வீதித் தடைகளை அகற்றும் முயற்சிகளிலும் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

ஹர்த்தால் காரணமாக கல்முனை, அக்கரைப்பற்று நீதிமன்ற அமர்வுகள இடம்பெறவில்லை.

கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய நகரங்களில் தமிழர்கள் தமது வர்த்தக நிலையங்கள், கடைகள் அனைத்தையும் பூட்டி ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கினர்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பைப் பலப்படுத்துவது குறித்து அம்பாறையில் நேற்று பாதுகாப்பு அதிகாரிகளின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. கிழக்கு மாகாண பிரதிப் பொலீஸ்மா அதிபர் நெவில் விஜேசிங்க தலைமையில் இக்கூட்டம் கூட்டப்பட்டது. (ஓ)

## மஹிந்த, அநுரா, ரத்னசிறி உட்பட 13பேர் சு.க.மாவட்ட தலைவர்களாக நியமனம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 13 மாவட்டங்களுக்கான தலைவர்களை கட்சியின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்திருக்கிறார்.

இவர்களில், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கும், அநுரா பண்டாரநாயக்க கம்பஹா மாவட்டத்துக்கும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஏனைய 11 மாவட்டங்களுக்கும் நியமிக்கப்பட்டிருப்போர் விவரம் வருமாறு:-

கண்டி - டி.எம்.ஜயரத்ன, பொலன்னறுவை - மைத்திரிபால சிறிசேன, களுத்துறை - ரத்னசிறி விக்கிரமநாயக்க, இரத்தினபுரி - டபிள் யூ.டி. ஜே.செனவிரட்ன, காலி-அமரசிறி தொடங்கொட, பதுளை - நிமால் சிறிபால டி.சில்வா, மொனறாகலை - சுமேதா ஜி.ஜயசேன, குருநாகல் - எஸ்.பி.நாவின்ன, அநுராதபுரம் - போட்டி பிரேமலால் திஸாநாயக்க, நுவரேலியா - சி.பி.ரத்நாயக்க.

கொழும்பு, திருகோணமலை, மாத்தளை உட்பட ஏனைய மாவட்டங்களுக்கு நியமிக்கப்படவிருப்போர் குறித்து ஜனாதிபதி ஆராய்ந்து வருகிறார் என்று சுதந்திரக்கட்சித் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

### நிலுவையிலுள்ள இரு வழக்குகளில்

## தாமதப்படுத்தாது தீர்ப்புகளை வழங்க நீதிபதிகளுக்கு உத்தரவு

### நீதிமன்றசேவை ஆணைக்குழு விடுத்தது

கொழும்பு,ஓக.20

நீண்டகாலமாக நிலுவையில் உள்ள இரு வழக்குகளின் தீர்ப்புகளை உடனடியாக வழங்குமாறு அவ் வழக்குகளை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள் இருவருக்கு நீதிமன்ற சேவை ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளதாக. கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

குறிப்பிட்ட இரு வழக்குகளிலும் தீர்ப்பு வழங்கப்படுவது தாமதப்படுத்தப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளை பரிசீலித்த பின்னரே நீதிமன்ற சேவை ஆணைக்குழு இந்த உத்தரவைப் பிறப்பித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

மூன்று வாரகாலத்துக்குள் இந்த இரு வழக்குகளின் தீர்ப்புகளை வழங்கத்தவறும் பட்சத்தில் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு ஆளாக நேரிடுமென சம்பந்தப்பட்ட நீதிபதிகளுக்கு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டின் சகல நீதிமன்றங்களிலும் வழக்குகளின் தீர்ப்புகள் தாமதமாக வழங்கப்படுவது குறித்து விசாரிக்க நீதிமன்ற சேவை ஆணைக்குழு, கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளது. இது தொடர்பாக ஆராய விசேட பிரிவொன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- இவ்வாறு அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (ஓ-9)

### வாகனத்திலிருந்து விழுந்த இளைஞர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஓக.20

ஓடிக் கொண்டிருந்த கன்ரர் வாகனத்தில் இருந்து தவறுதலாக விழுந்தவர் படுகாயமடைந்தார்.

நேற்று கல்வியங்காடு சட்டநாதர் சிவன்கோவில் வீதியில் நடந்த இச்சம்பவத்தில் கொக்குவில் மேற்கு, கொக்குவிலைச் சேர்ந்த து.ரமேஷ் (வயது 24) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(ஒ-6)

### வடக்கு - கிழக்கில் தெரிவான

## நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டது

வடக்கு - கிழக்குக்கென விசேட பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான நியமனக்கடிதங்கள் எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி வழங்கப்படவுள்ளன. இதற்கான அழைப்புக் கடிதங்கள் பொது நிர்வாக அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ளன.

இதில் தெரிவான 88 பேரில் யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் வருமாறு:-

**திறந்த பரீட்சை மூலம் தெரிவானோர்**

எம்.பி.நிரஞ்சன், கே.சுலோஜினி, கே.குணநாதன், வி.ஜெயராணி, எம்.பிரதீபன், எஸ்.சிவஸ்ரீ, ஏ.சோதிநாதன், எம்.ஜெகு, எஸ்.முரளிதரன், என். கோணேஸ்வரன், வி.மதுமதி, எம்.ஸ்ரீஸ்கந்தகுமார், பி.ஆரணி, ரி.உஷா, வை. பரந்தாமன், ஈ.தயாரூபன், கே.சுபாஜினி, கே.ஸ்ரீமோகனம், எஸ்.சத்தியசீலன், ரி.மஞ்சுளாதேவி, பி.தயானந்தன், ஆர்.ரி.ஜெயசீலன்.

**மட்டுப்படுத்தப்பட்ட. பரீட்சை மூலம் தெரிவானோர்**

கே.பிரபா, என்.அஞ்சலிதேவி, பி. குகநாதன், எம்.நந்தகோபாலன், எஸ். வசந்தகுமார்.

அகில இலங்கை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான நியமனக்கடிதங்கள் வழங்கப்படவுள்ளமையும் ஏற்கனவே தெரிந்ததே.

### யாழ்.மாவட்ட அணி நுவரேலியா பயணம்

13 வயதிற்குட்பட்டோர் அடங்கிய அணிகள் பங்கேற்கும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி நுவரேலியாவில் நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்கு யாழ்.மாவட்டத்தில் இருந்து அருணோதயக் கல்லூரி வீரர்கள் இன்று நுவரேலியா செல்லவுள்ளனர்.(ஒ-5)

## நல்லூர் ஆலய உள்வீதியில் இன்று இசை அர்ச்சனை

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் உள்வீதியில் இன்று மாபெரும் இசை அர்ச்சனை நிகழ்வு இடம்பெற உள்ளது. கார்த்திகைத் திருவிழா தினத்தில் இடம்பெறும் இந்த இசை அர்ச்சனை மூன்றாவது ஆண்டாக இம்முறை நடைபெறவுள்ளது.

திருவீதியுலா முடிவடைந்த பின்னர் மாலை 6.30 மணியளவில் இசை அர்ச்சனை ஆரம்பமாகும். அவ்வேளையில் ஆலயத்தின் அனைத்து விளக்குகளும் ஏற்றப்படும்.

உள் வீதியில் 8 திசைகளில் வயலின், வீணை, ஆர்மோனியம், ஓர்கன், புல்லாங்குழல், மிருதங்கம், தபேலா ஆகிய இசைக் கருவிகள் மூலமும் வாய்ப்பாட்டின் மூலமும் இந்த இசை அர்ச்சனை நடத்தப்படும்.

இலங்கையின் மூத்த கலைஞர்களுடன் வளர்ந்து வரும் கலைஞர்களும் இணைந்து இந்த இசை அர்ச்சனையை நடத்தவுள்ளனர்.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் இடம்பெறும் இந்த இசை அர்ச்சனையையொட்டி ஆலயத் திருக்கதவுகள் இன்று இரவு 9 மணிவரை திறந்திருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

### 9 ஆவது நாளாக கல்விசாரா ஊழியர் வேலைநிறுத்தம்

## கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்கள் கண்டன ஊர்வலம்; மகஜர் கையளிப்பு

மட்டக்களப்பு,ஓக.20

அனைத்துப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கத்தின் வேலைநிறுத்தம் நேற்று எட்டாவது நாளாகத் தொடர்ந்தும் நடைபெற்றது. வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்போர் நேற்றுக் காலை கண்டன ஊர்வலமொன்றை நடத்தினர். கிழக்குப் பல்கலைக்கழக தாதிமார் பயிற்சி நிலையம் முன்பாக ஆரம்பித்த ஊர்வலம் பதினொரு மணியளவில் மட்டக்களப்பிலுள்ள காந்தி சதுக்கத்தை வந்தடைந்தது.

ஊர்வலத்தில் சென்றோர் சம்பள உயர்வு கோரும் பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

பின்னர், பல்கலைக்கழக ஊழியர்கள், சங்கத் தலைவர் சூரியகாந்தன் தலைமையில் கச்சேரிக்கு ஊர்வலமாகச் சென்றனர். மட்டக்களப்பு மேலதிக அரசாங்க அதிபர் செ.புண்ணியமூர்த்தியிடம் மகஜரொன்றைச் சமர்ப்பித்தனர்.

'2001 ஆம் ஆண்டுமுதல் சம்பள முரண்பாட்டை நீக்க வேண்டுமென முன்வைக்கப்பட்டிருக்கும் தமது கோரிக்கைக்கு அரசு இணக்கம் தெரிவிக்க வேண்டும். அதனை அரசியல் சாயம பூசி மழுங்கடிக்க முனையக் கூடாது. கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டம் தொடருமென' அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரை ஜனாதிபதி, பிரதம மந்திரி, மூன்றாம் நிலைக் கலவி அமைச்சர் ஆகியோரிடம் சமர்ப்பிக்கும்படி வேலைநிறுத்தம் செய்வோர் மேலதிக அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.





அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் 21 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. இதன் ஓர் அம்சமாக நேற்று மட்டக்களப்பு நகரில் கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை நடத்தினர்.

# ஆயுதப் பெட்டிக்குள் இருந்து பக்தாத்தில் குழந்தை மீட்பு!

பக்தாத்தில் ஆயுதங்களடங்கிய பெட்டி ஒன்றிலிருந்து கைக்குழந்தையொன்று மீட்டெடுக்கப்பட்டுள்ளது. சதாமைத் தேடி படையினர் நடத்திய தேடுதல் வேட்டையின் போதே இக்குழந்தை மீட்கப்பட்டுள்ளது.

மூச்சுத்திணறி இறக்கும் தறுவாயிலிருந்த குழந்தையைப் படையினர் மீட்டு சிகிச்சையளித்துக் காப்பாற்றியுள்ளனர். பெட்டிக்குள்ளிருந்து ஆயுதங்கள் சிலவும் கைப்பற்றப்பட்டுள்ளன. குழந்தையின் தந்தையைக் கைது செய்து படையினர் விசாரணை செய்து வருகின்றனர்.



ஈராக்கின் தலைநகர் பக்தாத்துக்கு 168 மைல் வடக்கே உள்ள பிஜி என்ற இடத்தில் எண்ணெய் விநியோகக் குழாய்களில் ஏற்பட்ட வெடிப்பால் பெரும் தீ, வான் நோக்கி எரிகின்றது. உள்ளூர் தீயணைப்பாளர்கள் அதனை அணைப்பது பற்றி ஆராய்கிறார்கள்.

# சகாராவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐரோப்பிய பணயக்கைதிகள் விடுவிப்பு

ஐந்து மாதங்களுக்கும் மேலாக சகாரா பாலைவனத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 14 ஐரோப்பிய பணயக்கைதிகளை அல்ஜீரியத் தீவிரவாதிகள் கையளித்துள்ளனர். இவர்கள் பாதுகாப்பாக இருப்பதாக மாலி-ஜேர்மன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன், பணயக்கைதிகளின் விடுவிப்பு மாலி ஜனாதிபதியின் திறமையான சமரச முன்னெடுப்புக்களுக்கு கிடைத்த வெற்றி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணயக்கைதிகளில் நால்வர் சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள், 9 பேர் ஜேர்மன்காரர்கள், ஒருவர் ஒல்லாந்தர் ஆவர். இவர்கள் 45 பாகை செல்சியஸ் வெப்பங் கொண்ட பாறைப்பகுதியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். தென் அல்ஜீரியாவில் வைத்து கடந்த பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களில் கைதுசெய்யப்பட்ட 32 பணயக் கைதிகளில் 17 பேர் கடந்த மாதம் விடுவிக்கப்பட்டிருந்தனர். ஒருவர் வைத்திய வசதிகளின்றி பாலைவனத்தில் மரணமடைந்திருந்தார். விடுவிக்கப்பட்ட பணயக் கைதிகள் நேற்று பமாகோவுக்கு கொண்டுவரப்படவிருந்தனர். பின்னர் இவர்கள் அங்கிருந்து ஜேர்மனிக்கு அனுப்பப் படவிருந்தனர்.



பாகிஸ்தான் கராச்சியில் உள்ள லோனி கொட் என்ற இடத்தில் ஏற்பட்ட வீதி விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர். அவர்களின் சடலங்களை வைத்து உறவினர்கள் கதறியழும் காட்சி.

## உலக அரங்கில்

### செச்சினிய சண்டையில் 36 பேர் மரணம்!

மொஸ்கோ,ஓக.20

செச்சினியாவில் கடந்த வாரம் ரஷ்ய படைகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த சண்டையில் 36 பேர் கொல்லப்பட்டனர்.

இவர்களில் 24 பேர் தீவிரவாதிகள், 12 பேர் ரஷ்ய படைவீரர்கள். ரஷ்ய படைகள் நடமாடும் இடங்களில் தீவிரவாதிகள் கண்ணிவெடிகளை புதைத்து வைத்துள்ளனர். தற்கொலைப்படையினரைத் தெரிவு செய்யும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இதற்கிடையே சுட்டுக்கொல்லப்பட்ட தீவிரவாதிகளிடமிருந்து வீடியோ ஒலிநாடாக்கள், சில ஆயுதங்கள் என்பனவும் பறிமுதல் செய்யப்பட்டன.

# சிங்கப்பூரில் அடுத்த பிரதமராக லீ சின்லுங்கின் பெயர் சிபார்சு

சிங்கப்பூரின் தந்தை என்று கருதப்படும் லீ குவான்யூவின் மகனும், துணைப் பிரதமருமான லீ சின்லுங் அந்நாட்டின் அடுத்த பிரதமராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இப்போதைய பிரதமர் கோக் சோக் தோங் தேசியதின ஊர்வலத்தில் பேசும் போது, "நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியோரிடம் பேசிய போதும் அடுத்த பிரதமராக லீ சின்லுங்கின் பெயரையே முன்வைத்தனர். நானும் அவரது பெயரையே முன்வைக்கின்றேன்.

2007 ஆம் ஆண்டு அடுத்த பொதுத் தேர்தல் வருகின்றது. அடுத்த 2 ஆண்டுகளில் அவர் தன்னைப் பிரதமராக நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும்" - என்று கூறினார்.

51 வயதான லீ சின்லுங்குக்கு 1990 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் புற்றுநோய் இருப்பதாகக் கூறப்பட்டது. இதனால் அவரது அரசின் எதிர்காலம் கேள்விக்குறியாக இருந்தது. ஆனால், 7 ஆண்டுகள் கழித்து அவருக்குப் புற்றுநோய் இல்லை என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.

# குஜராத் முதல்வருக்கு லண்டனில் எதிர்ப்பு!

லண்டன்,ஓக.20

குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி நான்கு நாள் பயணமாக லண்டன் சென்றுள்ளார். முதல்வரை எதிர்த்து லண்டனில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

குஜராத்தில் அதிகளவு முதலீடு செய்யுமாறு வெளிநாட்டினரை ஊக்குவிக்கும் நோக்குடன் அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

லண்டனில் குஜராத் நண்பர்கள் ஏற்பாடு செய்திருந்த ஒரு நிகழ்ச்சியில் நரேந்திரமோடி பேசினார்.

அப்போது நிகழ்ச்சி நடநத கட்டடத்திற்கு முன் தெற்காசிய, ஒருமைப்பாட்டு சங்கத்தினரும் இந்திய முஸ்லிம் கவுன்சிலைச் சேர்ந்தவர்களும் ஒன்று கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சுமார் 200 இற்கும் மேற்பட்டோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குஜராத்தில் 'கோத்ரா' என்ற இடத்தில், நடந்த கலவரத்துக்கு மோடி பொறுப்பேற்கவேண்டும் என்றும் - நரேந்திரமோடியைக் கைதுசெய்ய வேண்டுமென்றும் - ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

# தீவிரவாதிகளை எதிர்க்க வருகிறது புதிய 'ரோபோ'

தீவிரவாதிகளை எதிர்த்துப் போராடி அலுத்து விட்டது போலும். அதனால் ஆஸ்திரேலிய அரசு தீவிரவாதிகளை எதிர்த்துப் போராட வென 'ரோபோ' க்களை (இயந்திர மனிதன்) வாங்கியுள்ளது.

இவ்வாறான 3 ரோபோக்களை அந்த அரசு வாங்கியுள்ளது. வானொலி கட்டுப்பாட்டுக்கருவி மூலம் இயங்கக் கூடிய இந்த ரோபோக்கள் ஒவ்வொன்றும் 12 துப்பாக்கிகளை ஏந்திச்செல்லக்கூடியவை.

மேலும் வெடிகுண்டுகளை வெடிக்கச்செய்வது, செயலிழக்கச்செய்வது போன்றவைகளையும் இவை திறம்படச் செய்கின்றனவாம்.



பங்களாதேஷில் இந்து பக்தர் ஒருவர் தனது மகனை கிருஷ்ணர் போன்று வேடம் புனைய வைத்து டாக்காவில் இடம் பெற்ற சமய ஊர்வலத்தில் காவிச் செல்லும் காட்சி. கிருஷ்ண ஜெயந்தி பங்களாதேஷில் நேற்றுக் கொண்டாடப்பட்டது.

# இஸ்லாமிய அமைப்பில் ரஷ்யாவை சேர்ப்பதற்கு பாகிஸ்தான் எதிர்ப்பு!

இஸ்லாமாபாத்,ஓக.20


இஸ்லாமிய மாநாட்டு அமைப்பில் ரஷ்யாவைச் சேர்த்துக்கொள்வதற்கு பாகிஸ்தான் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. அந்நாட்டின் வெளியுறவுத் துறை அதிகாரி ஒருவர் இக்கருத்தைக் கூறியுள்ளார்.

பெயர் குறிப்பிடவிரும்பாத அந்த அதிகாரி கூறியதாக மேற்கோள் காட்டி 'டான்' நாளிதழ் இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

57 உறுப்பினர்களைக் கொண்ட இந்த அமைப்பில் ரஷ்யாவையும் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புட்டின், மலேசியப் பிரதமர் மஹதிர் முகம்மதுவைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனையடுத்தே பாகிஸ்தான் வெளியுறவு அதிகாரி, ரஷ்யா இஸ்லாமிய அமைப்பில் உறுப்பினராகச் சேர்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய நாடுகள் தவிர்ந்த வேறு எந்த நாடும் இந்த அமைப்பில் உறுப்பினராவதை எதிர்க்கும் பாகிஸ்தான், ரஷ்யாவை உறுப்பினராகச் சேர்த்துக்கொண்டால் அது தவறான முன்னுதாரணம் ஆகிவிடும் என்றும் கூறியுள்ளது.



இந்தியாவின் தலைநகரான புதுடில்லியில் போக்குவரத்து அதிகம் மிக்க வீதியில் இரு காளைகள் மோதிக் கொண்டதில் சிறிது நேரம் வாகன நெரிசல் ஏற்பட்டது.

# ஈராக் முன்னாள் துணை அதிபர் அமெரிக்கப் படையினரால் கைது

பக்தாத்,ஓக.20

ஈராக்கில் பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின் நெருங்கிய சகாவும் முன்னாள் துணை அதிபருமான தவிரா யஸின் ரமடான் அமெரிக்கப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் பாதுகாப்புத் தலைமையகமான பென்ரகன் இந்தக் கைதை உறுதிப்படுத்தியுள்ளது.

ஈராக்கில் அமெரிக்காவால் தேடப்படுவோர் பட்டியலில் முதன்மையானவர்களுள் ஒருவராக இருந்தவர் இவர்.

மொசூல் நகரில் குர்டிஷ் தீவிரவாதிகளுடன் இணைந்து கூட்டுப் படையினர் மேற்கொண்ட தேடுதலில் இவர் கைதுசெய்யப்பட்டார்.

மொசூலில் இருந்து சுலைமானியா என்ற நகருக்கு அவர் செல்வதற்குத் திட்டமிட்டுக் கொண்டிருந்த சமயத்தில் அவர் கைதுசெய்யப்பட்டதாக லண்டனில் உள்ள குர்டிஷ் தலைவர் ஒருவர் தெரிவித்தார். (10)


## கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை - வெற்றிடங்கள்

01 **கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் - Junior Security Officer**

தகைமைகள்:- i) க.பொ.த. (சா/த) சித்தி ii) உயரம் 5'4" iii) மார்பு 32" iv) நல்ல தேகாரோக்கியமும், கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.

(இளைப்பாறிய பொலிஸ்/படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை)

02 **ரோந்துப் பாதுகாவலர்கள் - Patrolmen**

தகைமைகள்: i) எட்டாம் வகுப்பு சித்தி ii) உயரம் 5'2" iii) மார்பு 31" iv) நல்ல தேகாரோக்கியமும், கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு :- தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

03 **நேர்முகப் பரீட்சை :** 23.08.2003 சனிக்கிழமை காலை 09.00 மணிமுதல் 12.00 மணி வரை பின்வரும் ஆவணங்களுடன் பிரசன்னமாயிருக்கவும்.

☆ கிராம அதிகாரியின் நற்சான்றிதழ் (06 மாதங்களுக்குட்பட்டது) ☆ தே.அ.அட்டை
☆ பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ☆ வி.அ.அட்டை ☆ கல்விச்சான்றிதழ்.

04 **இடம் :**

43, கல்லூரி வீதி,
(யாழ். இந்து மைதானம் முன்பாக) யாழ்ப்பாணம். – பணிப்பாளர்.

(சி-29635)

# கதாப்பிரசங்கம் மூலம் சைவமும் தமிழும் தழைத்தோங்கச் செய்தவர் நல்லை ஸ்தாபகர்

## இன்று நல்லை ஆதீனத்தில் பீடாரோஹண விழா

தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தன் எழுந்தருளி வீற்றிருந்து தொழுவார்க்கிரங்கி திருவருள் சுரக்கும் திருத்தலம் தான் நல்லூர். இந்த நல்லூர்ப்பதியின் மேற்கு வீதியில் அமைந்திருக்கும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் இன்று தனது 37ஆவது அகவையில் பீடாரோஹண விழா காண்கிறது.

### கண்ணெனப் போற்றியவர்

சைவத்தையும் தமிழையும் தமது கண்களெனப் போற்றிக் காத்து வளர்த்துவந்த பெரியார்களுள் நல்லை திருஞானசம்பந்த ஆதன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளும் ஒருவர். சைவத்தைப் பேணிக்காக்க வேண்டும் என்ற ஒரேநோக்கில் ஸ்தாபிக்கப்பெற்ற ஒரேயொரு சைவ நிறுவனமான நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் சைவ மக்களுக்குக் கிடைக்கப்பெற்ற ஒரு பெரும் பொக்கிஷமாகும்.

தம்மையே முற்று முழுதாக கதாபிரசங்கப்பணிக்கென அர்ப்பணித்த ஒரு மகான் இவர். கேட்பவர்கள் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் கதாப்பிரசங்கம் செய்வதில் இவருக்கு நிகர் இவரே. நல்ல இனிமையான சாரீரம் படைத்த சுவாமிகள் கதை செய்யும்போது அதில கருத்தாழமும் கம்பீரமும் கலந்திருக்கும்.

### அவாவுடைய அடியார் கூட்டம்

மகாபாரதம், இராமாயணம், திருவிளையாடற்புராணம், கந்தரனுபூதி முதலான தொடர் நிகழ்வில் இவரது திறமை பரிபூரணமாக வெளிப்படும். ஒருநாள் கதை கேட்டால் போதும், தொடர்ந்து ஒவ்வொரு நாளும் கேட்க வேண்டும் என்ற அவாவினால உந்தப்பெற்று அடியார் கூட்டம் அணி திரண்டு தினசரி கதை கேட்கக் காத்திருக்கும்.

இப்படி ஒரு திறன்படைத்தவர் இன்று இல்லையே எனும் போது நாம் அபாக்கிய சாலிகளே!

தமது தொண்டையினாலேயே தொண்டுசெய்து சைவத்தைப் பேணிக் காத்த பெருந்தகை இவர் என்று கூறின மிகையாகாது. ஈழத்தில் மட்டுமன்றி இந்தியா,சிங்கப்பூர் முதலான வெளி நாடுகளிலும் இவரது குரல் ஓங்கி ஒலித்திருக்கின்றது.

இவரால் நிறுவப்பெற்ற இந்த திருஞானசம்பந்தர் ஆதீனம் நல்ல தொண்டாற்றி வருகிறது. சைவசமய பாட வகுப்புகள், சங்கீத வகுப்புகள், தையல், கோல வகுப்புகள், பாலர் வகுப்புகள், யோகாசன வகுப்புகள் என்று இன்னோரன்ன பல வகுப்புகளை நடத்தி மாணவ சமுதாயத்துக்கு பேருதவி புரியும் ஒரேயொரு ஆதீனம் இதுவே.

### காரணகர்த்தா

இன்று நாங்கள் சைவர்கள் என்று சொல்லிக் கொண்டு தலை நிமிர்ந்து நடக்கின்றோம் என்றால் அதற்குக் காரணகர்த்தா இவரே. பிறமதங்கள் புகுந்து வேரூன்றப் பார்த்தவேளையில மக்களைக் காத்து நின்ற பெருமை இந்த ஆதீனத்தையே சாரும்.

நல்லைக் கந்தன் உற்சவ நாள்களில் அதிகாலை திருமுறை வீதி பஜனையும், புராணபடனமும் அன்ன தானமும் இன்றும் தொடர்நது நடந்து வருகிறதென்றால் அதன் அருமை அளவிடற்கரியது.

### அளப்பரிய சேவை

ஸ்தாபகர் சென்ற வழியில் கடமையுணர்ச்சி தவறாமல் இப்பொழுது இருக்கும் இரண்டாவது குருமஹா சந்நிதானம் தமது சேவையைச் செவ்வனே செய்து வருகின்றார். சைவ மக்கள் விழா எடுக்கவும் மாநாடு கூட்டவும் ஒரு கலாமண்டபத்தை உருவாக்கி நல்ல முறையில் தொண்டாற்றி வரும் இவரது அளப்பரிய சேவை பாராட்டுக்குரியது.

இலங்கையிலேயே தனித்துவமாக ஓர் ஆதீனம் என்ற பெயரில் இயங்கி வரும் இந்த ஆதீனம், யாழ்ப்பாணத்திலே வாழ்கின்ற மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்று கூறின் சாலப் பொருந்தும். சைவாகளின் அறிவு வளர்ச்சிக்கு தன்னாலான முற்று முழுதான சேவையை இது வழங்குகிறது.

*வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்தி ஏத்தித் துதிக்க வேண்டியது நமது தலையாய கடமை* என்பதை உணர்த்தி நிற்கும் இந்த ஆதீனம் சமய தீட்சையை வழங்கி சைவர்களை உண்மைச் சைவர்களாக வாழவழிவகுத்துக் கொடுக்கின்றது.


### தனியிடம் பெற்றவர்

சமயதீட்சை பெறாதவர் சைவர்களே அல்லர். அந்த வகையில் சைவர்களைச் சைவர்களாக வாழவும் நெற்றியில் திருநீறு தரிக்கவும் வகை செய்த இந்த ஆதீனம், தொடர்ந்து சிறந்த தொண்டாற்றி தமிழ்மக்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் நாயன்மார் வாழ்ந்து காட்டிய வழியில் நாம் வழி நடக்கும்படி தூண்டவும் ஆவனசெய்து தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுத்திகழ எல்லாம் வல்ல நல்லைக்கந்தன் திருவருள் புரிய வேண்டும்.

சிவநெறிக் கலாநிதி
*இராசையா ஸ்ரீதரன்*

✡


## 13ஆம் வருட நினைவஞ்சலி



தோற்றம் 27 07 1934

மறைவு 20 08 1990

அமரர்
**மனவல் டோமினிக் (வாஸ்)**

ஆதரித்து அரவணைத்து எமைக்காத்து
பாதியில் எம்மைவிட்டு நீர் பிரிந்து
ஆண்டுகள் பதின்மூன்று கடந்தாலும்
எம் அன்பு மனங்களில் நீர் எப்போதும்
ஆசையோடு வாழ்கிறீர் ~ ஐயா!

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*இல. 41, ஓடக்கரை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(21577) (26-21-19-11)


# அமரர் அமிர்தலிங்கத்தின் பிறந்த தின நினைவுநாள்

கொழும்பு,ஓக.20

தமிழர் விடுதலைக் கூட்டணியின முன்னாள் செயலாளர் நாயகம் அமரா அ.அமிர்தலிங்கத்தின் 70ஆவது பிறந்த தினவு நிகழ்வும், பவளவிழாமலர் வெளியீட்டு நிகழ்வும் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்கு இடம்பெறவுள்ளன.

அமரர் அமிர்தலிங்கம் நினைவுப் பணிக்கழகம் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது. இந்த நிகழ்வில் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி, எம்.எஸ். செல்லச்சாமி எம்.பி., அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் ஆகியோருடன் இலங்கை கம்யூனிஸ் கட்சிப் பொதுச் செயலாளர் டி.இ.டபிள்யூ.குணசேகர, நவ சமசமாஜக் கட்சிப்பிரமுகர் வாசுதேவ நாணயக்கார, எஸ்.இஸட். எம், மசூர் மௌலானா,, இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் இராமலிங்கம், இங்கிலாந்தைச சேர்ந்த வைத்திய கலாநிதி அ.நீக்கலஸ்பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# பண்டத்தரிப்பு உப அலுவலகம் பழைய இடத்திலேயே அமையும்

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு உபஅலுவலகத்துக்கான புதிய கட்டடம் ஏற்கனவே உப அலுவலகம் இருந்த இடத்திலேயே அமைக்கப்படவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. புதிய கட்டடத்தை ஏற்கனவே உபஅலுவலகம் இருந்த இடத்தில் அமைப்பதா? அல்லது புதிதாகக் காணி கொள்வனவு செய்யப்பட்ட இளவாலை, பெரியவிளானில் அமைப்பதா? என்று அப்பகுதி மக்களிடையே நீண்ட நாள்களாக இழுபறி நிலவி வந்தது.

இதனை அடுத்துச் சகல தரப்பினரதும் கருத்துக்களை அறிவதற்காக நடைபெற்ற கலந்துரையாடலின் பின்பே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மு.பாலசிங்கம், சண்டிலிப்பாய் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.பா.பவநீதன் உட்படப் பொது மக்களும் கலந்துகொண்டனர்.

கடந்த 92ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்த உப அலுவலகம் பண்டத்தரிப்புப் பகுதியில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-10-95-185)

# கூட்டுறவுப் பணியாளருக்கு பயிற்சி

யாழ்.மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு கூட்டுறவு தொடர்பான அறிவை மேம்படுத்துவதற்கான பயிற்சி நெறி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சிநெறி கடந்த திங்கட்கிழமை குருநகரில் உள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டதாக பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இருவார காலம் நடைபெறும் இந்தப் பயிற்சிநெறி கூட்டுறவுத் திணைக்களம், மாவட்ட கூட்டுறவுச் சபை, வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின சமாசம் போன்றவற்றின் அனுசரணையுடன் இடம்பெற்று வருகின்றது

முதற்கட்டமாக மேற்படி சங்கங்களில் பணியாற்றும் கல்வி உத்தியோகஸ்தர்களுக்கு இந்தப் பயிற்சி நெறி அளிக்கப்பட்டு வருகின்றது. என்றும் பயிற்சி முடிந்ததும் ஏனைய பணியாளர்கள் மத்தியில் கூட்டுறவு தொடர்பான பிரசார நடவடிக்கையை இவர்கள் மேற்கொள்ளுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)


## நூல் வெளியீடு

கவிமணி
**அன்னைதாஸனின்**
**திருவருட் பாமாலை**

அளவையூர் நாகவரதரின் பாதக்கமலங்களிலிருந்து அருட்கவி விநாசித்தம்பி ஐயாவின் ஆசியுடன் இன்று 20.08.2003 இல் வெளிவருகின்றது.



சைவ அன்பர்கள் பாடிப்பரவி பயன் பெறுக.

வாழ்த்துவோர்:
**ENFIELD PAINTS**
THARMA DISTRIBUTORS AND PAINT DEALERS (PVT.) LTD.
Northern Provence Distributors
K.K.S. Road, Chunnakam.

(21601) (26-21-11-19)



**SHARP** be sharp ஜப்பானியத் தொழில்நுட்பம் இப்பொழுது யாழ்ப்பாணத்தில்



உத்தரவாதத்துடன் கூடிய பணத்திற்கேற்ற பெறுமதி.
யாழ் நகரிலேயே அனைத்துச் சாதனங்களுக்குமான உதிரிப்பாகங்களை (Spare Parts) பெற்றுக்கொள்ளலாம்.
நிபுணத்துவம் மிக்கவர்களால் விற்பனைக்குப் பிந்திய சேவைகளை யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

Browns Electronics Live it up
BG Browns Group of Companies

இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225150



## தேவை

தையல்வேலையில் அனுபவம் உள்ள ஆண்கள்- தேவை.
உடன் தொடர்புகொள்ளவும்.
குமார் தையல் அகம்
K.K.S. வீதி,
தாவடி, கொக்குவில்.
T.P : 0777 111486

(25-21-19-11) (21607)



## தேவை

பனைக் குருத்தோலைச் சார்வு தேவை.
தொடர்பு கொள்ளவும்.
அண்ணா பாம்
இணுவில்.

(25-21-19-11) (c/29631)



## கடை வாடகைக்கு

பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள கடை உடன் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
இ.விமலன்
187, பரமேஸ்வராச்சந்தி,
பலாலி வீதி, திருநெல்வேலி.
(யூனிவேர்சல் பன்சி)

(21600) (21-25-19-11)

உதயன்

## சமாதானப் போக்கைக் குழப்பும் சம்பவங்களும் குற்றச்சாட்டுகளும்

கடந்த சில தினங்களாக கிழக்கில் இடம்பெற்று வரும் சில கொலைச் சம்பவங்கள் பெரும் அரசியல் பரபரப்பையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

மூதுரைச் சேர்ந்த இரு முஸ்லிம்கள் திருகோணமலையிலும் மற்றும் இரு முஸ்லிம்கள் சம்மாந்துறையிலும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவங்கள் தமிழ் - முஸ்லிம் இனங்களிடையிலான முறுகல் நிலைக்கு வழிகோலியிருக்கின்றன.

இந்தச் சம்பவங்கள் குறித்து பகிரங்க அறிக்கைகளை வெளியிடும் முஸ்லிம் தலைவர்களும் சரி, விடுதலைப் புலிகள் உட்பட தமிழர் தரப்புத் தலைவர்களும் சரி, இத்தகைய செயல்கள் தற்போது துளிர் விட்டு வளர்ந்துவரும் தமிழ் - முஸ்லிம் நல்லுறவை மோசமாகப் பாதிக்கச் செய்யும் என்ற எச்சரிக்கையை வெளிப்படுத்தத் தவறவில்லை.

ஆனால், கொலைகளுக்கான சூத்திரதாரிகள இன்னார்தான் என்பதை அடையாளங்காட்டுவதற்கு ஆகக் குறைந்தளவு ஆதாரங்கள் ஏதேனுங்கூட இல்லாத நிலையில் - எடுத்த எடுப்பில் - கொலைக்கான குற்றச்சாட்டை வெகு இலகுவாகப் புலிகள் மீது சுமத்தி, அறிவிப்புகளை வெளியிடுகின்றார்கள் பல தலைவர்கள்.

தென்னிலங்கை ஊடகங்களும் கூட, துப்பாக்கி வைத்திருப்பவர்கள் ஆகப் புலிகள் மட்டுமே என்பது போலவும், அவர்களே இந்தப் படுகொலைகளைச் செய்தார்கள் என்பது உறுதி என்பது போலவும் செய்திகளை வெளியிட்டு பெரும் பிரசாரப் போர் நடத்தி வருகின்றன.

இக்கொலைகளைப் புலிகள் செய்திருக்கவில்லை என்று நியாயப்படுத்துவது அல்ல எமது நோக்கம். ஆயுதப் போராட்ட வழி முறையைத் தற்காலிகமாகவேனும் தள்ளிவைத்துவிட்டு அமைதி வழிமுறையில் சமாதானத் தீர்வு காண்பதற்கு முன்வந்து, கடந்த ஒன்றரை வருட காலமாக அரசுப் படைகளோடு இணக்கமான யுத்தநிறுத்தம் ஒன்றை வெற்றிகரமாகக் கடைப்பிடித்து வருகின்றனர் புலிகள். அவர்கள் மீது இப்படிப் பச்சைக் குற்றச்சாட்டு ஒன்றைச் சுமத்த முன்னர், அதற்கு ஆகக்குறைந்தளவு ஆதாரங்களையேனும் சம்பந்தப்பட்ட தரப்புகள் முன்வைப்பது அவசியம் - கட்டாயம் - என்பதைச் சுட்டிக் காட்டுவதே நமது நிலைப்பாடாகும்.

தென்னிலங்கை அரசியலில் ஒரு தளம்பல் நிலை தொடர்ந்து நீடிக்கின்றது. சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கவிழ்த்துவிட்டு, ஒரு பொதுத் தேர்தலை எதிர் கொள்ளாமலேயே அரசைக் கைப்பற்றுவதற்கு நிறைவேற்று அதிகாரமும், எதிரணியும் திரைமறைவில் திட்டம் தீட்டி வருகின்றன என ஏற்கனவே பல தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கான முயற்சிகள் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவது பற்றியும் செய்திகள் கசிந்துள்ளன.

இத்தகைய ஆட்சிக் கவிழ்ப்புக்கும் புதிய அரசு அமைக்கும் முயற்சிக்கும் நாடாளுமன்றத்தில் உள்ள முஸ்லிம் எம்.பிக்களின் ஆதரவு அவசியம்.

இன்றைய சூழ்நிலையில் அரசுத் தரப்பிலிருந்து முஸ்லிம் எம்.பிக்களைக் கிளப்புவதற்கு முஸ்லிம்களுக்கு எதிரான படுகொலைச் சம்பவங்கள் நன்கு உதவும் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அதேபோன்று, இத்தகைய சம்பவங்கள் சமாதான முயற்சிகளுக்கும் வேட்டு வைக்கக்கூடியவை. இவ்வாறான சம்பவங்களை அடுத்து ஏற்படக்கூடிய அசாதாரண நிலைமைகள், அசம்பாவிதங்கள் தற்போதைய யுத்தநிறுத்தச் சூழ்நிலையையே மோசமாகப் பாதிக்கத்தக்கவை.

அரசாட்சியைக் கைப்பற்றுவதற்கு கனவு கண்டுகொண்டிருக்கும் தென்னிலங்கைச் சக்திகளுக்கு பிடிக்காத ஒரு விடயம் இந்த யுத்தநிறுத்தமும் அமைதிப் பேச்சுகளும் சமாதான முயற்சிகளும் ஆகும்.

எனவே, அதனைக் குழப்பவும், ஐ.தே. முன்னணி அரசைக் கலைக்கவும் - ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் வீழ்த்தும் வகையில் - முஸ்லிம் படுகொலைச் சம்பவங்களும் அதையடுத்து ஏற்படக்கூடிய விபரீதங்களும் இச்சக்திகளுக்கு உதவும் என்பது கண்கூடு.

எனவே, கிழக்கில் நடக்கும் அசம்பாவிதங்களுக்கு கண்ணை மூடிக்கொண்டு - எடுத்த எடுப்பில் - புலிகள் மீது குற்றச்சாட்டை அள்ளி வீசும் முஸ்லிம் தலைவர்கள் இந்த விடயங்களையும் கவனத்தில் கொள்வது நல்லது.

முஸ்லிம்கள் கொல்லப்படுவதைப் பார்த்துக் கொண்டு முஸ்லிம் தலைவர்களும் ஏனையோரும் வாளாவிருக்கமுடியாது என்பது புரிகின்றது.

ஆனாலும், அப்படுகொலைகளுக்கு - வன்முறைகளுக்கு - காரணமானவர்களை அடையாளம் காண்பதற்கு உரிய ஆதாரங்கள் இல்லாத நிலையில் பல விதமான வாய்ப்புகளையும் சீர்தூக்கிப் பார்ப்பதும் அவர்களது பொறுப்பாகின்றது. - ஆதாரங்களின்றி குற்றச்சாட்டுக்களை ஒரு தரப்பு மீது சுமத்துவதற்கு முன்னர்.

# தொலைபேசி இணைப்புக்களை சீராக்க பரிவர்த்தனை நிலைய வலு அதிகரிக்கப்படும்

## பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஓக.20

குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்கும் இடையிலான தொலைபேசிச் சேவையை சீராக்க பரிவர்த்தனை நிலையத்தின் வலுவை அதிகரிக்கும் பணிகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பணியை பிரெஞ்சு நிறுவனமான 'அல்கட்டெல்' என்ற நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்கும் இடையில் சேவையை வழங்குவதற்கு யாழ்.பரிவர்த்தனை நிலையத்தில் 700 வெளி இணைப்புக்கள் தற்சமயம் உள்ளன. இந்த வெளியிணைப்புக்கள் மூலம் தற்போது பூரணமான சேவையை வழங்கமுடியாத நிலை காணப்பட்டது.

இதனால், இந்த வெளியிணைப்புக்களை இரட்டிப்பாக்க முடிவுசெய்யப்பட்டு அந்தப் பணிகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பணியை 'அல்கட்டெல்' என்ற பிரெஞ்சு நிறுவனத்தின் நிபுணர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

பணிகள் அடுத்த ஒரு மாத காலத்துக்குள் பூர்த்தி செய்யப்படும் என்றும் -

அதன் பின் தொலைபேசி அழைப்புப் பெறுவதில் உள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு ஏற்படும் என்றும் - ரெலிகொம் வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-3)

## வர்த்தமானியை விரைவில் வெளியிடுமாறு ஜனாதிபதி செயலகம் அறிவிக்கவில்லை

### அரசாங்க அச்சகர் நீதிமன்றத்தில் பதில்மனு

கொழும்பு,ஓக.20

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்பது சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தலை விரைவாக வெளியிடுமாறு ஜனாதிபதி செயலகம் எனக்கு அறிவிக்கவில்லை.

- இவ்வாறு அரசாங்க அச்சகத்தின் அச்சகர் நெவில் நாணயக்கார உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஒரு பதில் மனுவில் தெரிவித்திருக்கிறார்.

இநத வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாதது குறித்து அச்சகத்தில் ஏற்பட்டதாகக் கூறப்படும் கலவரத்தால் அச்சகத்துக்கு சேதம் ஏற்பட்டதேயன்றி எந்த ஓர் ஊழியரதும் அடிப்படை உரிமைகள் மீறப்படவில்லை எனவும் அம்மனுவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அச்சம்பவத்தால் ஊழியர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருப்பதாக மூன்று சங்கங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கும் மனுவுக்குப் பதிலளித்தே அரசாங்க அச்சகர் பதில் மனுத்தாக்கல் செய்திருக்கிறார்.

## காணாமற்போன ஒருவரின் எலும்புக்கூடு கண்டுபிடிப்பு

பேருவளை,ஓக.20

சுமார் எட்டு மாதங்களுக்கு முன்னர் காணாமற்போன ஒருவரின் எலும்புக்கூடு மீகஹதென்ன, வெலிகல்பொத்த காட்டில் வைத்து மீகஹதென்ன பொலீஸாரினால் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

இவரது எலும்புக்கூடு அருகே கண்டுபிடிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டையின் மூலம் வெலிப்பனை பகுதியைச் சேர்ந்த சிறிசோம கொடிதுவக்கு என்பவரே இறந்திருப்பவர் என அடையாளம் காணப்பட்டார்.

மகஹதென்ன பொலீஸார் மேலதிக புலன் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## 100 வருட பழைமை வாய்ந்த ஆலய விக்கிரகங்கள் திருட்டு

யாழ்ப்பாணம்,ஓக.20

சண்டிலிப்பாய், மாகியம்பிட்டி ஸ்ரீ மீனாட்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விக்கிரகங்களும் பெறுமதி வாய்ந்த பொருள்களும் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆலயக் கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த 100 வருட பழைமைவாய்ந்த பிள்ளையார், முருகன், மீனாட்சிஅம்மன், சண்டேஸ்வரர், மாணிக்கவாசகர் ஆதிய விக்கிரகங்களும் புதிய நீரிறைக்கும் மோட்டரும் திருடப்பட்டுள்ளன.

இதுபற்றித் தகவல் அறிந்தவர்கள் மானிப்பாய் பொலீஸ் மற்றும் சண்டிலிப்பாய் அரசியல்துறைப் பணிமனை ஆகியவற்றுடன் தொடர்புகொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (ம-8)

## நாடு திரும்பிய அகதிகளில் 20 பேர் மன்னார் சென்றனர்

யாழ்ப்பாணம்,ஓக.20

இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக நெடுந்தீவை வந்தடைந்த ஈழ அகதிகளில் 20 பேர் அவர்களது சொந்த இடமான மன்னாருக்கு நேற்றுக் காலை அனுப்பிவைக்கப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை இந்தியாவில் இருந்து படகுகள் மூலம் 22 ஈழஅகதிகள் நெடுந்தீவுக் கரையை வந்தடைந்தனர். இவர்களில் 20 பேர் மன்னாரையும் 2 பேர் யாழ்ப்பாணத்தையும் சொந்த இடமாகக் கொண்டவர்கள். இவர்களைப் பொறுப்பேற்ற நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தினர் நேற்றுமுன்தினம் மாலை அவர்களை யாழ். செயலகத்தில் ஒப்படைத்தனர்.

நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் தங்க வைக்கப்பட்ட இவர்களில் மன்னாரைச் சொந்த இடமாகக் கொண்ட 20 பேரும் நேற்றுக் காலை மன்னாருக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இவர்களுக்கான போக்குவரத்துச் செலவுக்காக ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா ஆயிரம் ரூபா யாழ். செயலகத்தினால் வழங்கப்பட்டது. யாழ். செயலக வாகனத்தில் முகமாலை வரை இவர்கள் கொண்டு சென்றுவிடப்பட்டனர். (ம-8)

### நாளை

ஆவணி 4
வியாழக்கிழமை
(21.08.2003)
திதி : நவமி
முன்னிரவு 9.07 வரை
நட்சத்திரம: ரோகிணி
நள்ளிரவு 11.56 வரை
சுபநேரம் : 7.35 - 9.05
ராகுகாலம்: 1.35 - 3.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

வெறும் வார்த்தைகளால் பிரார்த்திப்பதை விட இதயத்தால் பிரார்த்திப்பதே மேலானது.

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் விளையாட்டு பயிற்சிமுகாம் மாத இறுதியில்!

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் யாழ். மாவட்டத்தில் விளையாட்டு தொடர்பான வதிவிடப் பயிற்சி முகாம் ஒன்று இம்மாத இறுதியில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்தப்படவுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் தி.சிவதட்சணாமூர்த்தி இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட இளைஞர் கழகங்களில் உள்ள 17வயது தொடக்கம் 29வயதுக்கு உட்பட்ட இளைஞர், யுவதிகள் இந்த பயிற்சி முகாமில் இணைந்து கொள்ளலாம்.

இந்தப் பயிற்சி முகாம் எதிர்வரும் 29,30,31ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இதில் மெய்வன்மை, உதைபந்தாட்டம், கரபந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

யாழ். குடாநாட்டில் உள்ள 170 இளைஞர் கழகங்களைச் சேர்ந்த 80பேர்வரை இந்த முகாமில் பயிற்சிக்காகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இளைஞர் கழகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினை பூர்த்திசெய்து எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்பு இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளது. விளையாட்டுத்துறையில் ஆர்வமுள்ளவர்கள் யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்துடன் தொடர்புகொண்டு பயிற்சிமுகாமில் இணைந்துகொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-ரி)

## மன்னாரில் மீள்குடியமர்வு அபிவிருத்தி கலந்துரையாடல்

மன்னார்,ஓக.20

இடம்பெயர்வு, மீள்குடியமர்வு, அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கான கலந்துரையாடல் மன்னார் நகர சபை மண்டபத்தல் இன்று காலை நடைபெறும்.

மன்னார் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம், கொழும்பு மனிதாபிமான நிறுவனங்கள் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடைபெறும் இக்கருத்தரங்கிற்கு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வே.விஸ்வலிங்கம், அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர் பி.எம்.குரூஸ் முதலானோர் தலைமை வகிப்பர். மன்னார் மாவட்ட இராணுவ அதிகாரிகள், கடற்படை, பொலீஸ் உயரதிகாரிகள், புலிகள் இயக்க மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்கள் ஆகியோரும் இதில் கலந்துகொள்கின்றனர்.

## இன்னும் சில தினங்களுக்கு மழை தொடர்ந்து பெய்யலாம்

யாழ்ப்பாணம்,ஓக.20

யாழ்.குடாநாட்டில் இன்னும் சில தினங்கள் தொடர்ந்தும் மழை பெய்யக்கூடிய காலநிலை உள்ளதாக திருநெல்வேலியிலுள்ள வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமையில் இருந்து நேற்றுக்காலை 9 மணி வரையான காலப்பகுதியில் குடாநாட்டில் 118.9 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கடந்த 12ஆம் திகதி காலை 9 மணியிலிருந்து 13ஆம் திகதி காலை 9 மணி வரையும் 50.6 மில்லி மீற்றர் மழையும், 14ஆம் திகதி காலை 9 மணியிலிருந்து 15ஆம் திகதி காலை 9 மணிவரையும் 3.9 மில்லி மீற்றர் மழையும் 15 ஆம் திகதி காலை 9 மணியிலிருந்து 16ஆம் திகதி காலை 9மணி வரையும் 0.1 மில்லி மீற்றர் மழையும், 16ஆம் திகதி காலை 9 மணியிலிருந்து 17ஆம் திகதி காலை 9 மணி வரையும் 34.7 மில்லி மற்றர் மழையும், 17ஆம் திகதி காலை 9 மணியிலிருந்து 18 ஆம் திகதி காலை 9 மணி வரையும் 29.0 மில்லி மீற்றர் மழையும், நேற்றுமுன்தினம் காலை 9 மணியிலிருந்து நேற்றுக் காலை 9 மணி வரையும் 0.6 மில்லி மீற்றர் மழையும் பெய்துள்ளது.

இதேவேளை -

இந்த ஆண்டில் இதுவரை குடாநாட்டில் 524.1 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாகவும் நிலையத்தின் பதிவுகள் தெரிவிக்கின்றன. (ம-10-12-6)

## காணாமற்போனவரை தேடிச்சென்ற மற்றொரு நபரையும் காணவில்லை

மூன்று மாதத்துகளு முன்னர் காணாமற்போனதாகக் கூறப்படும் இளைஞரைத் தேடிச் சென்ற ஒருவரையும் காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த க.தேவராஜா கனிஸ்ரன்(வயது 20) என்ற இளைஞர் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் வரும் போது காணாமற்போயிருந்தார்.

இவரைத் தேடி புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆசீர்வாதம் மரியகுமார்(வயது 35) என்பவர் கடந்த முதலாம் திகதி புறப்பட்டிருந்தார். அவரையும் காணவில்லையென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமற்போன தேவராஜா கனிஸ்ரன் என்பவர் கிளிநொச்சியில் வேலை பார்த்து வந்தவர். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் அவர் யாழ்ப்பாணம் வரும்போதே அவர் காணாமற் போயிருந்தார். (ம-8-ரி)

# தமது பாதுகாப்புக்காக படையினர் அமைத்த பாரிய மண் அரண்களை அகற்றுவது யார்?

கடந்த 1995 இல் தென்மராட்சிப் பிரதேசத்தில் இருந்து கொடிகாமம் பிரதேசத்திற்கு படையினர் முன்னேறினர். அவ்வேளை - கொடிகாமத்தில் இருந்து வரணி எல்லை வரையும் - வல்லுபுரம் பிரதேசத்தில் இருந்து கற்கோவளம் வரையான பிரதேசம் வரையும் தமது பாதுகாப்புக் கருதி படையினர் பாரிய தொடர்மண் அணை ஒன்றை அமைந்திருந்தனர்.

இப்பாதுகாப்பு அரண் கொடிகாமம - பருத்தித்துறை வீதியின் கிழக்குப் பக்கமாக சுமார் ஆயிரம் மீற்றர் வரை சமாந்தரமாக அமைக்கப்பட்டது. இம் மண் அணை அமைக்கப்படும் போது பல காணிகளை ஊடறுத்து, ஒழுங்கில்லாமல் பாரிய புல்டோசர்கள் மூலம அக்கம் பக்கத்துக் காணிகளில் மணல் அள்ளி அமைக்கப்பட்டது.

செய்திக்கட்டுரை
**வரணிச் செய்தியாளர்**

இவ்வாறு தொடர் அணை அமைக்கப்பட்டபோது கட்டடங்கள் உடைக்கப்பட்டன. கிணறுகள் இடித்து மூடப்படடன. பத்து வீட்டுத்திட்ட வீடுகளும் உடைக்கப்பட்டன. பிரதான வீதிக்கு கிழக்கே சகல பாதைகளும் மூடப்பட்டன. ஓிரண்டு பாதைகள் மட்டும் மக்கள் பாவனைக்கென திறந்துவிடப்பட்டு அவ்விடங்களில் பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டன. அப்பாதையூடாக பயணம் செய்யும் பொதுமக்களுக்கு பாஸ்முறை நடைமுறைப் படுத்தப்பட்டு கடும் உடற்சோதனைக்கும் உட்படுத்தப்பட்டனர். அதுமட்டுமன்றி, பொது மக்கள் குறிப்பிட்ட அளவு உணவுப் பொருள்களையே தமது பாவனைக்கு எடுத்துச்செல்லவும் அனுமதிக்கப்பட்டனர்.

இதற்கான பிரதான காரணம் மேற்குறிப்பிட்ட மண் அரணுக்கு வெளியே உள்ள பிரதேசங்களான மாசேரி, இடைக்குறிச்சி, கரம்பைக் குறிச்சி, நாவற்காடு, குடமியன் வடக்கு, மிருசுவில் போன்ற இடங்கள் புலிகளின் பிரதேசம் எனக் கருதப்பட்டதனாலேயேயாகும்.

மேலும் அப்பிரதேசங்களிலிருந்து தமது பிரதேசங்களுக்குள் வரும் பாதைகள் எனக் கருதப்பட்ட இடங்களில் படையினரால் மிதிவெடிகளும் புதைக்கப்பட்டன. தற்போது ஓரிரு பாதைகளைத் தவிர சகல பாதைகளும் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளன. இந்த நிகழ்வுகளை இப்போது மக்கள் அநேகமாக மறந்தும்விட்டனர்.

இம்மண் அரணின் இரு மருங்கிலும் கம்பி வேலிகள் போடப்பட்டு பரவலாக மிதிவெடிகளும் புதைக்கப்பட்டுள்ளன. நிலைமை இப்படியிருக்க, புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலாகிவிட்டது. இம் மண் அரண் இன்றுவரை அகற்றப்படாமலே உள்ளது. இதனால் காணி உரிமையாளர்கள் தமது காணிகளை இனங்கண்டு திருத்தி எல்லைகளைட் போட்டு அடையாளங்காணமுடியாத நிலையில் உள்ளனர். ஒருசில காணி உரிமையாளர்கள் மட்டும் இம் மண் அரணை அழித்து முன்பிருந்த நிலைக்குக் கொண்டுவந்துள்ளனர்.

ஆனால், பெரும்பகுதியான அரண் இதுவரை அப்படியே உள்ளது. அப்பிரதேசம் காடு மண்டி பாரிய மரங்களும் வளர்ந்து காணப்படுகிறது. சிற்சில இடங்களில் இராணுவம் நிலைகொண்டு இருப்பதனால் அரணைத் திருத்தமுடியாத நிலையும் உள்ளது.

இந்த மண் அரண் பாரிய இயந்திரங்களின் உதவியுடன் அமைக்கப்பட்டமையால் பொதுமக்கள் பெரும் பணம் செலவழித்து இம்மண் அரணை முன்பிருந்த நிலைக்கு கொண்டுவர முடியாதவர்களாக உள்ளனர். மேலும சில பிரதேசங்களில் மிதிவெடிகள் இருப்பதும் இம்மண் அரணைத் திருத்த முடியாது இருப்பதற்கு ஒரு காரணமாகும்.

இப்பிரதேசத்தில் இராணுவம் பாரிய மண் அரண்களைத் தமது பாதுகாப்பிற்காக அமைத்து நிலைகொண்டு இருந்தது. பின்பு அவ்விடங்களில் இருந்து வேறு பிரதேசங்களுக்கு மாறும்போது அவ்வரண்களைக்கூட அப்படியே விட்டுவிட்டுச் சென்றமையும் அவ்வரண்கள் இன்றும் அப்படியே இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

உதாரணமாக, சுட்டிபுரம் அம்மன் கோவிலுக்கு இரு மருங்கிலும் பாதுகாப்பு அரண்கள் கைவிடப்பட்ட நிலையிலும், பொதுமக்கள் இன்றுவரை அதனை அகற்றமுடியாமல் இருப்பதும் இன்றும் காணக் கூடியதாகவுள்ளது.

மேலும், வரணி, இயற்றாலைப் பகுதிகளில் இராணுவம் நிலைகொண்டிருந்தபோது குமரணி என்னும் வயல் பிரதேசத்தில் அவர்களால் அமைக்கப்பட்ட பாரிய மண் பாதைகூட இன்னும் அகற்றப்படவில்லை. இதனால், வயல சொந்தக்காரர்கள் செய்வதறியாத நிலையில் உள்ளனர். எனவே, இவ் அரண்களை அழித்து காணிகளை முன்பிருந்த நிலைக்குக் கொண்டுவர சம்பந்தப்பட்டவர்கள் முன்வந்து காணி உரிமையாளர்களின் விசனத்தை போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# நல்ல பழக்கங்களுடன் மாணவர் வாழ போதனை செய்தவர் யோகர்சுவாமிகள்

## குருபூசை விழாவில் ஈழவேந்தன்

பாரம்பரிய சிவபூமியாகிய யாழ்ப்பாணத்தில் மாணவர்கள் நற்பழக்கங்களுடனும், தெய்வீக சிந்தனையுடனும் வாழ்வதற்கு தனது போதனையாலும், சாதனையாலும் வழிகாட்டியவர் சிவயோக சுவாமிகள்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலை அணியின் செயலாளர் மா.க.ஈழவேந்தன்.

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற யோகர் சுவாமிகளின் குருபூசை தினநிகழ்வில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலையின் இந்து மாணவர் மன்றப் பொறுப்பாசிரியர் சோ.குக தாசசர்மா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிவயோகசுவாமிகள் வெளித்தோற்றத்தில் மட்டுமன்றி மனத்தூய்மையாலும் தனது செயற்பாடுகளாலும் சிவனடியாராக வாழ்ந்தது மட்டுமன்றி, ஆன்மீக ஈடேற்றத்துக்கும் வழிகாட்டியுள்ளார். ஒவ்வொரு மாணவர்களும் தமக்கே உரிய சிறப்பான பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்து நற்பழக்கவழக்கங்களுடன் வாழப்பழகிக் கொள்ளவேண்டும். அதுவே, எமது எதிர்காலத்துக்கு வழிகாட்டும். இன்றைய மாணவர்களில் சிலர் பண்பாட்டையும் சமயப்பற்றையும் மறந்து வாழ்கிறார்கள். அது அவர்களது வாழ்வின் பாதையை மாற்றிவிடக் கூடும். அதனால், அவர்களது பெற்றோருக்கும், சமூகத்துக்கும் கூட அவப்பெயர் ஏற்பட்டுவிடலாம் - என்றார். (எ-10)

யாழ். மாநகரசபைப் பிரிவில்

# உலக உணவுத் திட்ட அனுசரணையுடன் 6 குளங்கள், வாய்க்கால்கள் புனரமைப்பு

கொழும்புத்துறை,ஓக.20

உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் யாழ். மாநகரசபை பிரிவில் 6 குளங்களும் கால்வாய்களும் வண்டல் மண் அகற்றி ஆழப்படுத்தப் படவுள்ளன.

தேவரிக்குளம், நெடுங்குளம், இலந்தைக்குளம், புல்லுக்குளம், இராஜாளிக்குளம் மற்றும் குருநகர்ப் பகுதி கால்வாய்களே இவ்வாறு புனமைப்புச் செய்யப்படவுள்ளன.

முதற்கட்டமாக கொழும்புத்துறை இலந்தைக்குளம் புனரமைக்கப்படவுள்ளதாகவும், தினமும் 4 மணித்தியாலங்கள் மேற்கொள்ளப்படும் இவ்வேலைத் திட்டங்களில் ஆண், பெண் இருபாலாரும் இணைந்து கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

சேவை அடிப்படையில் இடம்பெறும் இந்தப் பணிகளில் இணைந்து கொள்ளும் அந்தந்தக் கிராம மக்களுக்குத் தினமும் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-30)

# ரயில்வேத் திணைக்கள இடங்களை மீளப்பெற அதிகாரிகள் நடவடிக்கை

கொழும்புத்துறை,ஓக.20

ரயில்வேத் திணைக்களத்துக்குச் சொந்தமான இடங்களை மீளப்பெறும் நடவடிக்கைகளில் ரயில்வே அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

யாழ். புகையிரதப் பகுதியில் அமைந்துள்ள புகைபிரத ஊழியர்கள் மற்றும் ஊழியர்களுக்கான தங்கும் விடுதிக் கட்டடங்களில் தற்போது தற்காலிகமாகக் குடியிருக்கும் மக்களை அவ்விடங்களை விட்டு அடுத்த ஆண்டு மே மாதத்திற்கு முதல் வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இந்த விடுதிகளில் தற்போது இடம்பெயர்ந்த மக்கள் வசித்து வருகின்றனர். ரயில்வே அதிகாரிகள் இப்பகுதிகளுக்கு நேரில் சென்று அவ் அறிவித்தலை வழங்கியுள்ளனர்.

அத்துடன், சொந்தக்காணிகள் இல்லாதோரும் ரயில் பாதைக்கு அருகில் வசிப்போரும் ரயில்பாதையை ஆக்கிரமித்து வீடுகள், கடைகள் என்பவற்றை அமைத்துள்ளனர். சில இடங்களில் ரயில்பாதையில் வழிபாட்டு ஸ்தலங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இச்சட்டவிரோத ஆக்கிரமிப்புக்களை அகற்றும் முகமாக நில அளவைத் திணைக்களத்தினால் ரயில் பாதைகள் உள்ள இடங்கள் அளவீடு செய்யப்பட்டு வருகின்றன.

இதில் முதற்கட்டமாக யாழ் ரயில நிலையத்தில் இருந்து குருநகர் இறங்குதுறை அலுப்பாந்தி களஞ்சியத்திற்கு செல்லும் ரயில்பாதையின் அளவீட்டு வேலைகள் இடம்பெற்று வருகின்றன. (ஒ-30)

## நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.20

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினரால் நடத்தப்பட்டுவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்பத்தில் வி.கே.கானமூர்த்தி, எஸ்.பாலமுருகன், கே.கிருஷ்ணதாசன் ஆகியோரின் நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறவுள்ளது. தவில் - என்.நந்தகுமார், பி.நர்மதன் ஆகியோர். (ம-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.20

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் சைவ மகா சபையினரால் ஆலய மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய அரங்கில் நடத்தப்பட்டுவரும் தெய்வீகத் தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்வில் இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு 'இசையும் இறைவனும்' பற்றி சி.வை.நித்தியானந்த சர்மா இசைச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (ம-10)


★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.20

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி வடபிரதேச இந்துப் பேரவையால் நல்லூர் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்தப்பட்டுவரும் தெய்வீக நிகழ்ச்சித் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு 'குருவாய் வருவாய்' என்னும் பொருளில் சிவத்திரு எம்.எஸ். ஸ்ரீதயாளன் சொற்பொழிவாற்றுவார். (எ-10-30)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

பதினெட்டாம் (கார்த்திகை) திருவிழா



## கார்த்திகை நாதனே காத்திடுவாய்

இடி யிடித்துவான் ஒளி யுதிர்த்திட
எட்டுத் திக்கதும் இனி யதிர்ந்திட
துடி யெடுத்தெமை தாளிடை போட்டவர்
தமை யுணர்ந்துமெம் தரவுகள் தந்திட
மிடி யுதிர்ந்துமே மேதினி யெங்கணும்
மெய்ம்மையாய் தமிழ் மேனிலை கண்டிட
அடி தொழுதனம்; கார்த்திகை நாளினுன்
அரங்கி லெழுந்திடும் ஒ(ளி/லி)யென அருளுவாய்.
- அனலையூர்ச் சேந்தன்.

## நல்ல வரம் தா முருகா!

உனைச் சுற்றி வள்ளி வர
இருவரைச் சுற்றி தெய்வ யானை வர
மூவரைச் சுற்றி பக்தர் கூட்டம் வர
கோவிலைச் சுற்றி இசை முழங்கி வர - அந்த
தெய்வீக சூழலில் நான் தினம் சுற்றிவந்து
கேட்கிறேன் நல்ல வரம் தா என்.
- தி.பாரதி - நாவற்குழி.

## ஆதரித்திடுவாய் அருள்வேலா

எடுப்பு
எங்கெங்கு பார்த்தாலும் - உந்தன்
எழிலுருவம் தோன்றுதடா நல்லூர்க் கந்தா
தொடுப்பு
அங்கிங்காய் எங்கெல்லாம் - எம்மை
ஆதரித்திடுவாயப்பா அருள்வேற் குமரா
முடிப்பு
தங்குமயில் கோழிக்கொடி தாங்கி எழுந்துன்
தரிசனத்தை நிநர்சனமாய் தருவாய் அப்பா
பொங்குதமிழ் இனம் ஓங்கிப் புவியிற் புகழ்பெற(ப்)
புத்தொளியில் நித்தமுமே புலர்த்தும் ஐயா.
- முருகனடியான்.

## உமை மைந்தன் பாதம் பணி

ஆடி வருகிறான் வேலனடி - நீ
ஆடி வந்தால் தேடி ஓடடி
நாடு நலம்பெற வேண்டுமடி - நீ
நாடு நல்லையான் பாதமடி
தானம் செய்திட வேண்டுமடி - சமா
தானம் மலர்ந்திட வேண்டுமடி
மைந்தன் துயர் மடியுமடி - உமா
மைந்தன் பாதம் பணியடி.
- எஸ்.அம்சன் - ஏழாலையூர்.

## நலமருள் நல்லை நாயகனே!

நல்லைத் திருத்தல நாயகனே
நலமருள் நாளுமெம் நாயகனே
அல்லல் அழித்தருள் நாயகனே
அடியவர் உளமுறை நாயகனே
நல்குவை வளம்பல நாயகனே
நனிசிதமைக் காத்தருள் நாயகனே
வல்வினை வீய்த்தருள் நாயகனே
வடிவேலுடை நல்லூர் நாயகனே.
- தா.தேவமதுரம்.

## ஓடி வந்து காத்தருள்வாய்

காலிழந்து கையிழந்து
கண்பார்வை தனையிழந்து
கோலூன்றித் தடுமாறிக்
கூனிக் குறுகிவரும்
கோலமதைப் பார்ப்பதற்கா
கண்படைத் தாய் கதிர்வேலா
ஓலமிட்டு கதறுகின்றோம்
ஓடிவந்து காத்தருள்வாய்.
மு.வே.அன்பழகன்.

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
10
10
1948



மறைவு
22
07
2003

## திருமதி
## தியாகராசா இலட்சுமிப்பிள்ளை
### (செல்வமக்கா)
### மருதங்கேணி

"என் பிள்ளையின் மணக்கோலம் காணாமல் போகின்றேன்
என்று கவலையுடன் பிரிந்த தாயே!
என் மணக்கோலம் காண ஓடோடி வருவாயா அம்மா"

எமது அன்புத் தெய்வத்தின் பிரிவையறிந்து ஓடோடிவந்து எம் துயரில் பங்குகொண்ட எம் உறவுகள் அனைவருக்கும், வெளிநாடுகளில் இருந்து தொலைபேசிமூலம் தந்திகள், தொலைநகல்கள், தபால்கள் மூலமும் அனுதாபங்கள் தெரிவித்து எமது துயரில் பங்குகொண்ட அன்புள்ளங்களுக்கும் எமது தாய் நோயுற்றிருப்பதை அறிந்து சிகிச்சைக்காகப் பணவுதவி புரிந்த வெளிநாட்டில் வாழும் எமதருமை உறவுகளுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்ட வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்க பணியாளர்கள், பணிப்பாளர்களுக்கும், மருதங்கேணி சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கும், உடுத்துறை மகாவித்தியாலய ஆசிரிய, மாணவ சமூகத்தினருக்கும், உடையார்கட்டு மகாவித்தியாலய ஆசிரிய சமூகத்தினருக்கும் இறுதிச்சடங்கில் கலந்து எமது துக்கத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன், நாளை (21-08-2003) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மருதங்கேணி தெற்கு,*
*தாளையடி.*

பிரிவால் துயருறும்:
**வீ.எஸ்.தியாகராசா** (கணவர்),
**தி.புஸ்பவதி** (மகள்),
**உற்றார், உறவினர்கள்.**

(21462) (21-19-14)

## திருடப்பட்ட சைக்கிள் மீட்பு!

யாழ்நகரப் பகுதியில் களவாடப்பட்ட ஐந்து சைக்கிள்கள் மீட்கப்பட்டு யாழ்.பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதாக குற்றவியல் பொலீஸ் அதிகாரி ராஜபக்ஸ தெரிவித்துள்ளார் இரண்டு ஆண்கள் சைக்கிள்களும், மூன்று பெண்கள் சைக்கிள்களும் வண்ணார்பண்ணை பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும்-இந்த சைக்கிள்களின் உரிமையாளர்கள் அவற்றை அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-ரி)

## சாவகச்சேரிக்கு புதிய பொலீஸ் அதிகாரி

தென்மராட்சி,ஓக.19

சாவகச்சேரி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக தலைமைக்காரியாலய சிரேஷ்ட இன்ஸ்பெக்டர் எஸ்.பீ.என்.அபேரத்ன பெறுப்பேற்றுள்ளார்.

கெப்பிட்டிப்பொல பொலீஸ் நிலைய பிரதம இன்ஸ்பெக்டராக கடமையாற்றிய இவர், கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் சாவகச்சேரி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகப் பொறுப்பேற்றார்.

சாவகச்சேரி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய ஜீ.ஜீ.விமலசிறி களுத்துறை பொலீஸ நிலைய தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டுள்ளார். (எ-117)









# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

அல்லப்பிட்டி, 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கபிரியல் பிலேந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.341790034V), விசேட அடையாள அட்டை கடற்படை அடையாள அட்டை வயோதிப அடையாள அட்டை என்பன 09.08.2003 அன்று யாழ்ப்பாணத்திற்கும் அல்லப்பிட்டி சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் லக்ஷனா கொமினிக்கேஷன், K.K.S. வீதி, யாழ்ப்பாணம் (ப.நோ.கூ. முன்னால்).
(21579)

கந்தர்மடத்தைச் சேர்ந்த மங்களேஸ்வர சர்மாவுடைய மோட்டார் சைக்கிள் லைசென்ஸ் புத்தகம், சிறு தொகைப் பணம், தேசிய, விசேட அடையாள அட்டைகளும் யாழ்ப்பாணத்திலிருந்து கந்தர்மடம் செல்லும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நா.பாலசுப்பிரமணியக்குருக்கள், 48, புகையிரத வீதி, கந்தர்மடம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும்.
(21620)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த (B.Sc.) தனியார் நிறுவனத்தில் தொழில்புரியும், 5'5", அச்சுவினி 6ஆம் பாதம், லக்கினத்தில் செவ்வாய் (பாவம்44), வயது 28, அழகிய மணமகளுக்குப் பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். தொடர்பு: விளம்பர இலக்கம் 1993, உதயன், யாழ்ப்பாணம்.
(21599)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பமும், 32 வயதும், செவ்வாய்க்குற்றமும் இல்லாத, மகம் நட்சத்திரத்தில் பிறந்த அழகிய, ஆங்கில பட்டதாரி ஆசிரியருக்கு 16 இலும் குறைவான கிரகபாவமுடைய நல்ல குடும்பமும் அழகும் குணமும் வசதியுமுள்ள மணமகள் தேவை (பட்டதாரி ஆசிரியை விரும்பத்தக்கது). விள. இல. 1991, மே/பா உதயன். (21583)

## விற்பனைக்கு

உரும்பிராய் வடக்கு, கற்பகப் பிள்ளையார் கோயில் வீதியில் 5 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ராஜகோபால், T.P.: 021 222 6348 அல்லது சிவகுருநாதன், கட்டுடை, மானிப்பாய். (21610)

நல்ல நிலையிலுள்ள (இல. 86 - 9724) (KUWASAKI) கௌசாக்கி மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: கானான் ஜெப ஆலயம், T.P.: 3653 (21609)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

தரமான Prima Broiler குஞ்சுகள் எம்மிடம் விற்பனைக்குண்டு. விலை ரூபா 45/-. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(21616)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1Kg 160.- மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 1. மான்ஸ் பாடசாலை வீதி, டச்சுறோட், உடுவில் 2. பொன்னாலை வீதி, விதானையார் வளவு, மானிப்பாய். (21611)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Brolier குஞ்சுகள் அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 25.08.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (21614)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

சுத்தமான Dobermann Pincher நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (21616)

## பூங்கன்றுகள் விற்பனைக்கு

முசந்தாஸ் (சிவப்பு - பிங்), எவகிறீன், நித்தியகல்யாணி, பாரிஜாதம், ஐந்தூரியம் (சிவப்பு), மஞ்சள் கொடிப்பூ, செவ்வரத்தை, அடுக்கு நந்தியாவெட்டை, ஈரப்பலா ஆகிய கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (I.C.R.Cக்கு அண்மையில்) T.P.: 222 - 6563 (21466)

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை, தம்பசிட்டி அ.மி. பாடசாலைக்கு அண்மையில் நன்னீர், மின்சார வசதியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: த.தர்மபாலசிங்கம், திருஞானசம்பந்த வீதி, இத்தியடி வைரவர் கோயில் முன்பாக, வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை. (21557)

கொக்குவில் கிழக்கில் 5 - ROOMS, 2 - HALL, 1 - KITCHEN, BATHROOM உடன் கூடிய வீடு மருத்துவ பீடத்துக்கு அண்மையில் வீதியோரமாக விற்பனைக்குண்டு. தொடர்பு: 0778 659976
(சி-29633)

## ரயில்வே ஊழியர்கள் 22ஆம் திகதி வேலைநிறுத்தம்

கொழும்பு,ஓக.20

ரயில்வே திணைக்களத்தை அதிகாரசபையாக மாற்றும் வர்த்தமானி அறிவித்தலை ரத்துச் செய்யுமாறு கோரி எதிர்வரும் 22ஆம் திகதி ரயில்வே ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவிருக்கின்றனர்.

ரயில்வே திணைக்களத்தைச் சேர்ந்த 22 தொழிற்சங்கங்கள் இந்த வேலைநிறுத்தத்தில் பங்குகொள்ளும். வேலை நிறுத்தத்துக்கு முதல் நாள் மாலை ரயில்வே பொது முகாமையாளர் அலுவலகம் அருகேயிருந்து போக்குவரத்து அமைச்சுக்கு ஊர்வலமாகச் சென்று அங்கு அமைச்சருக்கு மகஜர் ஒன்றை வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

## ஓட்டோ தடம்புரண்டு பலத்த சேதம்

வலி.வடக்கு,ஓக.20

வைத்தியசாலையில் அவசர நோயாளரைச் சேர்த்து விட்டு திரும்பிய ஓட்டோ தடம்புரண்டதில் பலத்த சேதம் அடைந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணியளவில் மல்லாகம் சோடாக் கம்பனி ஒழுங்கைக்கு அண்மையாக இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அதிகாலை நேரம் அப்பகுதியில் ஆள்கள் நடமாட்டம் இல்லாத போதிலும் சாரதியின் அவலக் குரலைக் கேட்ட பொதுமக்கள் சாரதியை ஓட்டோவில் இருந்து மீட்டெடுத்தனர்.

ஓட்டோ சாரதி காலில் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாக இடுக்குத் தடிகள் கைகளுக்கு கொடுத்தே நடப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.
(எ-86)

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தில் மாவட்ட கடற்றொழிற் பரிசோதகராகக் கடமை புரியும் திரு.க.தர்மலிங்கம் அவர்களின் அன்புத்தாயார்

### திருமதி கந்தையா அன்னலட்சுமி

அவர்கள் 18.08.2003 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்.
கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம்.
யாழ்ப்பாணம்.

(21613)(11-15)



ஓம் சரவணபவ

கைதடி - கயற்றசிட்டி

### அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான

பரிபாலனசபை

### விண்ணப்பம் கோரல்

மேற்படி ஆலயத்தில் இரண்டு பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது.

1. ஆலய பரிபாலக உதவி ஆள்:
   இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர் சைவ ஆகம ஒழுக்க சீலராகவும் 40 - 55 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
2. ஆலய காவலாளி:
   இப்பதவிக்கு 45 - 60 வயதுக்கு உட்பட்ட நல்ல தேக ஆரோக்கியமானவராக இருத்தல் வேண்டும்.

இவ்விருபதவிகளுக்கும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் 05.09.2003ஆம் திகதிக்கு முன் தங்கள் சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

தலைவர்,
பரிபாலன சபை.

(21593) (25-21-11-15)





சமாதானத்தை உறுதிப்படுத்துவோம்.

பிள்ளைகள் வளர்ந்த பிறகு அவர்களது விளையாட்டுப் பொருட்களுக்கு ஏற்படும் நிலை போல, சமாதானமும் கவனிப்பாரற்றதாகி விடுமா? சமாதானத்தின் செழுமையை இன்று நம்பிள்ளைகள் அனுபவித்து மகிழ்கின்றனர். அவர்களை மீண்டும் இருள் சூழ்ந்த வாழ்வில் வீழ வைப்பது சரியா? அவர்களின் நிரந்தர சமாதானக் கனவை கலைப்பது முறையா? சமாதானத்தை தங்கு தடையின்றி முன்னெடுப்போம். இது நம் கடமை.

Save the Children
in Sri Lanka

Grant McCann

## இராணுவ முகாம் அமைப்பதால் பாதிப்படையும்

# பொற்பதி மக்களின் இயல்பு வாழ்வை பாதுகாக்கக் குரல் எழுப்பவேண்டும்

### பல்கலை. மாணவர் ஒன்றியம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஓக.20

இராணுவ முகாம் அமைக்கப்படுவதால் பாதிக்கப்படும் வடமராட்சி கிழக்கு பொற்பதி கிராம மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதுகாக்க அனைவரும் இணைந்து குரல் எழுப்ப வேண்டும்.

- இவ்வாறு யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக, அங்குள்ள மக்களுடன் நேரில் மாணவர் ஒன்றியம் சென்று நடத்திய கலந்துரையாடலின் அடிப்படையில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 17ஆம் திகதி காலை 10.00 மணியளவில் யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் தலைமையில் பல்கலைக்கழக மாணவர்களும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை பிரதிநிதிகளும் வடமராட்சி கிழக்கு, குடத்தனை, பொற்பதி கிராமத்தில் இராணுவ முகாம் அமைக்கப்படுவதைப் பார்வையிடச் சென்றனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு ஒன்றரை வருடங்களின் பின்னும் இப்பகுதி கிராம மக்களைத் தமது பாதுகாப்பு கவசங்களாகப் பயன்படுத்தும் நோக்கோடு அக்கிராமத்தைச் சுற்றிவர இராணுவ முகாம் அமைக்க அப்பகுதி இராணுவ தலைமையகம் திட்டமிட்டுள்ளது. இது புரிந்துணர்வு ஒப்பந்த மீறல் மட்டுமன்றி அடிப்படை மனித உரிமைமீறலும்கூட என்பது அப்பகுதியைப் பார்வையிடும்போது மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. அக்கிராம மக்களின் குடிசைகளில் இருந்து ஒரு சில மீற்றர்கள் தொலைவில் சுற்றிவர இராணுவ முகாம் அமைக்கப்படுவதால் தம் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கூட அம்மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். இக்கொடுமையைத் தாங்கமுடியாத அப்பகுதி மக்கள், இதனை மனித உரிமைகள் ஆணைக் குழு, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு போன்றவற்றுக்குத் தெரியப்படுத்தினர். இவ்வாறு அனுப்பப்பட்ட முறைப்பாட்டுக் கடிதங்களை உடனடியாக மீளப் பெற்றுக்கொள்ளுமாறு இராணுவத்தினர் தொடர்ந்தும் அமமக்களை அச்சுறுத்தி வருகின்றனர்.

அத்துடன், அப்பகுதி மீனவர்கள் மீது பாஸ் உட்பட பல கெடுபிடிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இக் கெடுபிடிகளை நேரில் பார்க்கவெனச் சென்ற எமது குழுவினரை இராணுவத்தினர் தடுத்துநிறுத்தினர். நாம் பல்கலைக்கழக மாணவர்கள் என பதை உறுதிப்படுத்துமாறு இராணுவ அதிகாரி கேட்டுக்கொண்டார். அதற்கேற்ப பல்கலைக்கழக அடையாள அட்டைகளைக் காட்டிய பின்பும் அனுமதி கிடைக்கவில்லை. இதனால், இராணுவத்திற்கும் மாணவர்களிற்கும் இடையே சிலமணி நேர வாக்குவாதம் நடைபெற்றது. அதன்பின்னர் இராணுவத்தால் வரையறுக்கப்பட்ட சிறு பகுதியை மட்டும் சென்று பார்வையிடுமாறு அனுமதித்தபோது மாணவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்து, அவ்விடத்தில் இருந்து திரும்பி மீண்டும் கிராம மக்களோடு கலந்துரையாடினர். அப்போது அம்மக்களின் மன அழுத்தத்தை உணரமுடிந்தது.

இம்முகாம் அமைப்புத் தொடர்பாக அங்கு சென்ற போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் கூட அம்மக்களிற்குப் புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி இராணுவம் விரும்பிய இடங்களில் புதிதாக முகாம் அமைக்கலாம் என்று கூறியுள்ளது. இவ்வாறு அம்மக்களிற்கு விளக்கமளித்த இதே கண்காணிப்புக் குழுவினர் நீண்ட காலமாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் குரங்குபாஞ்சான் பகுதியில் புலிகள் அமைத்த முகாமை அகற்றுமாறு கோருவது மிகுந்த வேதனையளிக்கின்றது.

இதுதவிர, தேர்தல் காலத்தில் அம்மக்களின் வாக்குகளைப்பெற்ற அமைச்சரோ அன்றி நாடாளுமன்ற உறுப்பினர்களோ இதுவிடயத்தில் கண்டுங் காணாதது போல் இருப்பது தமக்கு வேதனை அளிக்கிறது என அம்மக்கள் தெரிவித்தனர்.

எனவே, இம்முகாம் அமைப்புத் தொடர்பாக உண்மை நிலையைப் புரிந்து அனைவரும் இம்மக்களின் இயல்பு வாழ்விற்காகக் குரல்கொடுக்க முன்வரவேண்டும் - என்றுள்ளது.(ஓ)



ஐ.ஏ.ரீ. சித்திரப் பயிற்சி நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் விழா அண்மையில் யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஓவியர் ரமணி, மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். விரிவுரையாளர் ச.சண்முகராஜா, ஆசிரிய ஆலோசகர் நா.சுந்தரலிங்கம், நிர்வாகப் போஷகர் ச.துரைவீரசிங்கம் ஆகியோரும் அருகில் காணப்படுகின்றனர். (எ)

# தெஹிவளை முதல் கல்கிசை வரை திங்களன்று கடையடைப்புப் போர்

கொழும்பு,ஓக.20

மாநகரசபையின் வரிகள் அதிகரிப்பு, காலி வீதியின் இருபுறங்களிலும் வாகனங்கள் நிறுத்த அனுமதிக்கப்படாமை ஆகியவற்றை எதிர்த்து தெஹிவளை முதல் கல்கிசை வரையில் உள்ள கடைக்காரர்கள் நேற்றுமுன்தினம் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், நேற்றுக்காலை முதல் கடைகள் மூடப்பட்டிருந்தன. கறுப்புக கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன.

நேற்றுமுன்தினம் காலை 6 மணிக்கு ஆரம்பமான இப்போராட்டம் நேற்றுக் காலை 6 மணிவரை நீடித்தது.

வீதியோரங்களில் வாகனங்கள் நிறுத்த இடமளிக்கப்படாமையினால் தமது வர்த்தக நிலையங்களுக்கு மொத்தமாகப் பொருள்களை ஏற்றி வரும் வாகனங்களையும் நிறுத்த முடியாதிருப்பதாக வர்த்தகர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். தமது வாடிக்கையாளர்களும் பொருள் கொள்வனவுக்காக வாகனங்களை நிறுத்தி வைக்கமுடியாதிருக்கின்றனர் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

வாகனங்கள் நிறுத்த முடியாதிருப்பதால் தமது வர்த்தக நடவடிக்கைகள் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று வர்த்தகர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# புலிகளின் படுகொலைகளுக்கு எதிராக அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

### பிரதமர் தெளிவுபடுத்தவில்லை என்கிறார் ஜனாதிபதி

மாற்று அரசியல்கட்சிப் பிரமுகர்களையும் படையினரையும் கொலை செய்துவரும் புலிகள், அரசகட்டுப்பாட்டுப் பகுதிகளில் முகாம்களையும் அமைக்கின்றனர். இவை தொடர்பாக புலிகளுக்கு எதிராக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன? இதுகுறித்து பிரதமர் இதுவரை நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தவில்லை இது ஏன்?

இப்படிக் கேள்வி எழுப்பியுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

சமாதான நடவடிக்கைகள் குறித்து தொழில்சார் நிபுணர்கள் சங்கத் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுக் குழுவில் ஜனாதிபதியின் பிரதிநிதி ஒருவரையும் சேர்த்துக்கொள்ளுமாறு ஆரம்பம் முதல் பிரதமரிடம் நாம் கேட்கிறோம். ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகள் உத்தியோகபற்றற்ற முறையில் தமது நிர்வாகத்தை விரிவுபடுத்திவருகிறார்கள் என்றும் ஜனாதிபதி தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் நாடாளுமன்றத்துக்கோ, மக்களுக்கோ அல்லது அமைச்சரவைக்கோ இதுவரை தெளிவுபடுத்தவில்லை என்றும் அந்தக் கடிதத்தில் ஜனாதிபதி குற்றஞ்சாட்டியுள்ளார். (ம)

# கிருஷ்ண அவதாரத்தின் சிறப்பினை வெளிப்படுத்தும் கிருஷ்ண ஜெயந்தி



**இன்று புதன்கிழமை கிருஷ்ண ஜெயந்தி தினமாகும். அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

முன்னொரு நாள் தீய செயல்கள் மலிந்ததன் காரணமாக பூமி பாரம் அதிகரிக்கவே பூமா தேவியானவர் தேவலோகம் சென்று முறையிட தேவர்களும் பூமா தேவியை அழைத்துச் சென்று ஸ்ரீமத் நாராயணரிடம் முறையிட்டனர்.

திருப்பாற்கடலில் பள்ளிகொள்ளும் வைகுந்தவாசனும் "அஞ்சாதீர்! பூலோகத்தில் வாசுதேவரின் மனைவி தேவகிக்கு எட்டாவது குழந்தையாக நான் விரைவில் அவதரிக்கப்போகிறேன், அப்போது உங்கள் குறைகள் யாவும் நீங்கும். தீயோரை அழித்து தர்மத்தைக் காப்பேன். இது உண்மை. நீங்கள் அனைவரும் சென்று வாருங்கள்" என்று அவர்களுக்கு உறுதி கூறி மறைந்தார். தேவர்களும் பூமா தேவியும் பகவானைத் தோத்திரம் பாடித் துதித்து தத்தம் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

பூலோகத்திலே வாசுதேவர் என்பவர் ஏழாவது மனைவியாக தேவகி என்பவரை மணஞ்செய்து கொண்டு தனது மனைவியுடன் வீட்டுக்குப் புறப்பட்டார். கல்யாண ரதத்தை தேவகியின் ஒன்றுவிட்ட சகோதரனாகிய ஹம்சன் செலுத்திக்கொண்டிருந்தான் தேவகிமேல் அளவுகடந்த அன்பு வைத்திருந்தான் ஹம்சன்.

ரதம் வீதிவழியே வந்து கொண்டிருக்கிறது. அப்போது "அடே ஹம்சா! எவளை உன் உயிர்ச் சகோதரியாக எண்ணிக்கொண்டிருக்கிறாயோ அவளுக்குப் பிறக்கும் எட்டாவது குழந்தையால் நீ கொல்லப்படுவாய்" என்றொரு பெரிய குரல் ஒலித்தது.

தேரை நிறுத்தி வாளை எடுத்து ஹம்சன் தேவகியை வெட்டப் போனான் உடனேயே வாசுதேவர் அவனைத்தடுத்து "மைத்துனரே! தேவகியால் எந்தக்கெடுதலும் உமக்கில்லை. அப்படியிருக்க தேவகியை ஏன் கொல்லவேண்டும்? நான் சொல்வதைக்கேளும் மைத்துனரே, தயவு செய்து அவளைக் கொல்லாதீர்" என்று கூறிக் ஹம்சனின் காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினார். ஹம்சனும் வாசுதேவர் சொல்வது சரிதான் என்று எண்ணி தேவகியை விட்டுவிட்டான்.

சில மாதங்கள் கழிய ஒருநாள் நாரதர் ஹம்சனிடம் வந்து "தேவகிக்குப் பிறக்கும் எட்டாவது குழந்தையாக பகவான் அவதாரமெடுத்து உன்னைக்கொல்லப்போகிறார்" என்று தனக்கே உரிய பாணியில் கூறி மறைந்தார். நாரதர் சென்றதும் கலக்கமடைந்த ஹம்சன் உடனடியாக வாசுதேவரையும் தேவகியையும் சிறையிலடைத்தான்.

சிறையிலிருந்து தேவகி பெற்ற யோகமாயையின் அம்சமாகிய ஆறு குழந்தைகளையும் ஹம்சன் கொன்றுவிடடான். ஏழாவது கர்ப்பமானது ஆதிசேஷன் அம்சமாக உருவானது. பகவான் அருளால் அது குறைமாதத்தில் கலைக்கப்பட்டு வாசுதேவரின் மற்றொரு மனைவியான ரோக்ணி வயிற்றில் யோகமாயை அந்தக் கருவைச் சேர்த்துவிட்டது. தேவகியின் கர்ப்பம் கரைந்துவிட்டதாக ஊர்மக்கள் பேசிக்கொண்டனர்.

பகவானும் வாசுதேவர் உடலுள் புகுந்து தேவகியின் கருவில் சேர்ந்துவிட்டார். தேவகி எட்டாவது முறையும் கர்ப்பமானார். பகவானை கருவில் சுமப்பதால் தேவகி மிகுந்த அழகும் தேஜசும் உடையவராகவும் காணப்பட்டார். ஹம்சன் இம்முறை மிகவும் கலக்கமடைந்து சிறைக்கு மேலும் காவலிட்டு குழந்தை பிறந்தவுடன் தனக்கு அறிவிக்கும்படி காவலாளிகளுக்கு கட்டளையிட்டான்.

ரோக்ணியின் வயிற்றில் யோக மாயையால் சேர்க்கப்பட்ட கருவானது உரிய காலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்தது. வெண்மை நிறமான பலராமர் என்பவர் இவர்தான்.

தேவகியின் வயிற்றிலுள்ள பகவான் அவதரிக்கும் நாளும் வந்தது. தெட்சணாயண காலமாகிய ஆவணி மாதத்தில் கிருஷ்ணபக்ஷத்து அட்டமித்திதியுடன் ரோகிணி நட்சத்திரமும கூடிய நாளில் நள்ளிரவு சரியாகப் பன்னிரண்டு மணிக்கு பகவான் தர்மத்தைக் காக்கும் பொருட்டு பூமியில் அவதரித்தார். திக்குகள் விளங்கின உலக மாந்தர் மனதில்; இனம் புரியாத உவகையுண்டாகியது.

*ப.க. சுதர்சனக் குருக்கள்*

என்ன அதிசயம்! இரவு பகலாகக் கண் விழித்துக்காத்த காவலர்கள் பகவான் அருளால் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். சங்கு சக்கரங்களுடன் தோன்றிய தெய்வீகக் குழந்தையை வாசுதேவரும் தேவகியும் தமது பூர்வஜன்ம புண்ணியத்தால் கண்குளிரக்கண்டு போற்றித் துதித்தனர். கணப்பொழுதுதான் அவர்கள் மகிழ்ந்தனர். மறுகணமே குழந்தை பிறந்த சேதியை ஹம்சன் அறிந்தால் குழந்தையை ஹம்சன் கொன்றுவிடுவானே எனக்கவலையுமடைந்தனர்; செய்வதறியாது திகைத்துப் போயினர்.

அப்போது அவர்கள் காதில் ஓர் அசரீ கேட்டது "வாசுதேவரே கலங்க வேண்டாம்! என்னை எடுத்துச் சென்று கோகுலத்தில் உள்ள யசோதையிடம் வைத்துவிட்டு யசோதையிடம் உள்ள பெண் குழந்தையை தேவகியிடம் கொண்டு வந்துசேர். எல்லாம் நல்லபடி நடக்கும்" என்று கூறியது. வாசுதேவரும் அவ்வாறே குழந்தையை தேவகியிடமிருந்து பெற்று தோளில் சுமந்தபடி புறப்படத் தயாரானார்.

பலம்வாய்ந்த பூட்டுக்கள் யாவும் தாமாகத் திறந்து வழிவிட்டன. அதன் வழியே வாசுதேவரும் வெளியேறி கோகுலம் நோக்கிப்புறப்பட்டார். குறுக்கேவந்த யமுனையும் பிரிந்து வழிவிட்டது. செல்லும்போது மழை பெய்யவே ஆதிஷேஷன் குடை போலக் காத்தது.

கோகுலத்தில் அனைவரும் தூங்கிக்கொண்டிருக்க வாசுதேவர் தனது ஆண் குழந்தையைக் கிடத்திவிட்டு யசோதையிடமிருந்த பெண் குழந்தையை எடுத்துக்கெண்டு சிறை திரும்பினார். திரும்பியவுடன் சிறைக் கதவுகள் தாமாக மூடிக்கொண்டன. மூடியதும் குழந்தை வீரிட்டு அழத் தொடங்கியது.

குழந்தையின் அழுகுரல் கேட்டதும் காவலர்கள் எழுந்து ஹம்சனிடம் சென்று குழந்தை பிறந்த சேதியை அவனிடம் கூறினார்கள். சேதி கேட்டதும் ஹம்சன் கோபக்கனல் தெறிக்க சிறைச்சாலைக்கு மிக வேகமாக வருகிறான்.

சிறைச்சாலைக்கு அவன் வந்ததும் ஹம்சனைக்கண்டதும் வாசுதேவரும், தேவகியும் பயத்தினால் வெலவெலத்துப் போனார்கள். ஹம்சன் கோபத்துடன் பற்களை நற நற வெனக் கடித்துக்கொண்டு "எட நீ என்னைக் கொல்லப்பார்க்கிறாயா! உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று கூறி தேவகியின் மடியிலிருந்த குழந்தையின் காலைப் பிடித்து ஓங்கிச் சுவரில் குழந்தையின் தலையை அடிக்கப்போனான்.

அப்போது குழந்தையானது கையையுருவி உயரக்கிளம்பி எட்டுக் கைகளுடனும் தசாயுதங்களுடனும் காளி வடிவில் அவன் முன்னே தோன்றிக்கட கடவெனச்சிரித்து "அடே மூடனே நான் யோகமாயையடா! உன்னைக் கொல்ல பகவான் வேறோர் இடத்தில் அவதரித்துள்ளாரடா!" என்று கூறி மறைந்தது.

கோகுலத்தில் நந்தகோபருடைய மாளிகையில் பகவான் பிறந்த சேதி ஊரெங்கும் பரவியது கோகுலம் எங்கும் விழாக்கோலம் பூண்டது. தீமைகளை ஒழித்து தர்மத்தைக் காக்கும் தெய்வக்குழந்தையைப் பார்க்க மக்கள் கூட்டம்கூட்டமாகச் சென்று வணங்கி ஆனந்தமடைந்தனர். "கண்ணா! கருமை நிறக்கண்ணா!"

மாந்தர் ஆனந்தத்தில் ஆடிப் பாடினர். அன்று தொடக்கம் உலக மக்கள் அனைவரும் ஆவணி மாத கிருஷ்ண பக்ஷத்து ரோகிணி கலந்த அட்டமித்தினத்தில் நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு கண்ணன் பிறந்த நாள் (ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி) எனும் விரதநாளாகக் கொண்டாடி வருகின்றனர். கண்ணன் ஹம்சனைக் கொல்லமாத்திரமின்றி பாண்டவர் ,சகாயனாக பாரதப்போரை நடத்தி வாழ்வியல் சமய தத்துவமான கீதையை உபதேசித்து சாதாரண மானிடனாக வாழ்ந்து எமக்கெல்லாம் நல்லருள் புரிந்தார்.

★

## கலந்துரையாடல்

3ஆம் வருட முகாமைக் கற்கை, வணிகபீட மாணவர்களுக்கான பரீட்சை தொடர்பான கலந்துரையாடல்.

*காலம்:* 20.08.2003 காலை 11 மணி
*இடம்:* மாணவர் பொதுஅறை

(21624) (26-21-19-12) — *மாணவப் பிரதிநிதிகள்.*

## கடையில் திருட்டு

இணுவில் கந்தசாமி ஆலயத் திற்கு அருகில் உள்ள கடையில் உள்ள பொருள்கள் நேற்றுமுன்தினம் இரவு திருட்டுப்போயுள்ளன. கடையில் இருந்த சிகரட், பிஸ்கட் உட்பட பல் வேறு பொருளகளும் களவாடப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-86)

## கைமாறிவிட்டது


மிருசுவிலுக்கும் யாழ். நக ரிற்கும் இடையில் தனியார் பஸ் ஸில் 18.08.2003 அன்று பச்சை நிற (BAG) பை ஒன்று கைமா றிவிட்டது. தயவு செய்து கை மாறி எடுத்தவர்கள் கீழுள்ள முகவரிக்கு அறியத்தரவும்.

15/3, டேவிற் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P.: 077-6154089.

(31-11-17) (21632)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 01 - 01 - 1928



மறைவு 22 - 07 - 2003

## அமரர் ஆறுமுகம் வைத்திலிங்கம்

(செட்டியார்)

எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி, தந்தி, கடிதம் மூலம் அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும் சகல வழிகளிலும் எமக்கு உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (21.08.2003) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி மங்களேஸ்வரி (மனைவி),
வவி, மலர், றேனுகா, சர்வா (மக்கள்),
இந்திராணி, சின்னராசா, குணம்,
திலகா (மருமக்கள்).

*பழைய றோட்,*
*கராச் ஒழுங்கை,*
*கோப்பாய்.*

(சி-29640) (31-11-17)

## STUDY B.Eng IN INDIA
## ADMISSIONS 2003 - 04
## VINAYAKA MISSIONS' GROUP OF COLLEGES

www.vinayakamissions.com

Vinayaka Missions' is the leader in the field of education for more than two decades running totally 25 Educational Institutions imparting Medical, Engineering, Management and Computer education, in addition to various other courses.

A.V.INSTITUTE OF TECHNOLOGY (A.V.I.T)
(Approved by AICTE, New Delhi,
Affiliated to Anna University)
Paiyanoor, Chennai. TAMIL NADU

**B.Eng Degree** (4 years)

Electronics & Communication Engg. (ECE)
Mechanical Engg. (Mech.)
Electrical & Electronics Engg. (EEE)
Computer Science & Engg. (CSE)

Eligibility: Pass in Maths, Physics, & Chemistry at GCE A' Level

*Contact for more details: -*
NN EDUCONSULT
181/1 W.A. Silva Mawatha,
Colombo – 6.
*Telephone:075 55 88 44*
*021-2222797*
*E mail:nnimpex@slnet.lk*

*SPOT ADMISSIONS 20th 21st & 22nd August At "Uthayan" Office Kasturiyar Road, For Sri Lanka Students*

## K.T.C புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்

யாழ். நகரில் நீண்ட கால இடைவெளியின் பின் அநேக பெற்றோர்கள். மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க. சிங்களத்தில் விசேட பயிற்சி பெற்ற

**BY : E.S. பியதாசாவின்**

சிங்கள வகுப்புக்கள்.
ஆரம்பம் : 16.08.2003
பிற்பகல் - 4.00
(புதிய நேரம்)
மேலதிக தகவல்களை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(21629) (31-11-17) - நிர்வாகி.

## கடை வாடகைக்கு

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் கடை ஒன்று வாடகைக்கு உண்டு.
(அகலம் 12அடி நீளம் 30அடி)

தொடர்பு கொள்ள வேண்டிய இடம்:
**சிற்றி மெடிக்கல்**
487, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.021 - 222 2198

(21621) (26)

## பிரதேச சபை, நல்லூர்
### மீள்கூறுவிலை கோரல்

எமது சபை பாவனையில் உள்ள நாலு சில்லு உழவு இயந்திரம் திருத்த வேலைக்கான உதிரிப்பாகங்களைப் பொருத்தித் திருத்துவதற்கான கூலி உட்பட கூறுவிலை பொருத்தமானவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. இதற்கான விண்ணப்பப் படிவத்தினை இன்றிலிருந்து ரூபா 300/- செலுத்திப் பெற்று 22.08.2003ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு முன்னர் தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

செல்லையா செல்வரத்தினம்
செயலாளர்,
பிரதேச சபை, நல்லூர்.

15.08.2003.
(C/29638) (26-24-19-15)

## கண்ணீர் அஞ்சலி

யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய ஆசிரியர்
**திருமதி கருணாதேவி சிவசுப்பிரமணியம்**
அவர்களின் அன்புத் தந்தையார்

### அமரர் குமாரவேலு மதியாபரணம்

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்.

(21622) (26-21-19-15)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 1947 - 06 - 29



விண்ணில் 2003 - 07 - 22

## ஆனந்தம் சண்முகநாதன்

(குஞ்சு)

திதி: 20-08-2003

கண்ணின் கருவிழி போல் எம்மையெலாம்
கலங்க விடாது காத்து நின்ற - அப்பா
கடமையே கண்ணாக எமை நீ வளர்த்தாயே
கலங்குகிறோம் உனை நாம் பிரிந்து இன்று
மண்ணதனில் உன்னுருவம் மறைந்திட்டாலும்
விண்ணுலகில் உன் ஆத்மா சாந்தி பெறும்
எம் வாழ்வில் என்றும் நின் நினைவகலாது
உன்னுருவம் எங்கள் மனதில் உருவெடுக்கக்
காத்திருப்போம.

மனைவி, மக்கள்,
சகோதரர்கள்.

(21625)(21-15-19)

## NORTH EAST TECHNOLOGIES(NET)

**No. 34, SADDANATHAR ROAD, NALLUR, JAFFNA**

Tele.: 021 - 222 3786, 0777-708498 (Hot line), Fax: 021- 222 6077
Web site: www.net.slt.lk



**Computers to suit your BUDGET**

CADDY SHACK
**Computers made in expensive**

NEW ARRIVALS FROM USA

| | |
|---|---|
| P 1-166Mhz/ 1.2GB HDD/ 32MB RAM/ 1.44 FLOPPY | Rs.13,500/= |
| P 1-200Mhz/ 2.1GB HDD/ 32MB RAM/ 1.44 FLOPPY | Rs.15,750/= |
| P 11-233Mhz/ 3GB HDD/ 64MB RAM/ 1.44 FLOPPY | Rs.18,700/= |
| P 11-233Mhz/ 2GB HDD/ 32MB RAM/ 1.44 FLOPPY | Rs.16,930/= |
| P 11-266Mhz/ 3GB HDD/ 64MB RAM/ 1.44 FLOPPY | Rs.19,880/= |
| P 11-300Mhz/4GB HDD/ 64MB RAM/ 1.44 FLOPPY | Rs.21,768/= |
| P 11-333Mhz/ 3.2GB HDD/ 64MB RAM/ 1.44 FLOPPY | Rs.22,240/= |
| P 11-350Mhz/ 4GB HDD/128MB RAM/ 1.44 FLOPPY | Rs.23,420/= |
| P111-450Mhz/ 4GB HDD/ 64MB RAM/ 1.44 FLOPPY | Rs.32,742/= |
| P111-550Mhz/ 6.4GB HDD/ 64MB RAM/ 1.44 FLOPPY | Rs.36,282/= |
| P111-600Mhz/ 10GB HDD/ 64MB RAM/ 1.44 FLOPPY | Rs.39,940/= |

THE PRICE IS ALL INCLUSIVE OF 15" SVGA COLOUR MONITOR, BRAND NEW KEY BOARD & MOUSE, PAD, BRAND NEW MACHINES PIV 1.2., 1.6, 2.4, 1.8. MULTI MEDIA PACKAGE OF 32X CD ROM, SOUND CARD & BRAND NEW SPEAKERS

**Computer Accessories at attractive prices**

24மணிநேர குளிரூட்டப்பட்ட Internet Browsing Centre - Rs.40/= per hour
செலுலர் தொலைபேசி விற்பனை, சேவை, திருத்தவேலைகள், unlocking வசதிகள், Networking, LAN. WAN, SOHO, Net2 phone ஆலோசனைகள் வெளிநாடுகளிலும் யாழ்ப்பாணத்திலும் திருமண மற்றும் வைபவங்களை ஒரே நேரத்தில் கண்டுகளிக்க.

**Web designing மற்றும் ஆலோசனைகள்.**

**VHS to CD copying வசதிகள் மற்றும Photo copy,** Fax வசதிகள்.

**Net2Phone - Rs.7/= per min.**

(C/29632) (26)

## விற்பனையாகின்றது!

இந்துமதப் பொது அறிவு
**A.S.A. தரங்கனி**
*க.பொ.த. சாதாரணதர – உயர்தர மாணவர்களுக்கு உகந்தது.*
(28-24-19-15) எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (C/29508)

## உடன் தொடர்புகொள்ளவும்

எனது மனைவியான **திருமதி ரோகினி** அவர்கள் கீழ்க்காணும் முகவரியில் உடன் தொடர்புகொள்ளுமாறு மகள் சார்பில் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

- மு. ...மோகன் (கணவர்).

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
77, நாவலர் வீதி,
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
(21638) (29-12-18-31)

## நல்லூர் முருகனுக்கு இன்று கார்த்திகை அமுது

அறப்பணிக்கு நிலைக்களமாம்
அன்னை துர்க்கா மண்டபத்தில்
கார்த்திகை நன்னாளில்
கந்தவேளைப் பிரார்த்தித்து
அமுதளித்து அகமகிழ்வோர்:

**புதிய நதியா நகைமாடம்**
தங்கப்பவுண் நகை வியாபாரம்
இல.103. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
☎ 021 - 3261
(21626) (24-15-19)

## அந்தியேட்டி அழைப்பும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



### திருமதி வெங்கடேசன் நீலாம்பிகை

பிறப்பு: 18-09-1921 . இறப்பு:04-08-2003

எட்டு எட்டாய் காலங்கள் சென்றாலும்
எட்டாத தூரத்திற்குச் சென்றாலும்
வாழ்வென்னும் மாயத்தைச் சொன்னாலும்
நீங்காமல்' எம் உள்ளத்திலே
வாழும் எம் அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்போமே!

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்ட உறவினர்களுக்கும், அயலவர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நன்றியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் இல்லத்தில் நாளை (21.08.2003) வியாழக்கிழமை அன்று நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

*158/1,கண்டி வீதி,*
*அரியாலை.* (சி29652) (32-12-18-31)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## நெஞ்சம் மறவாத 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

பிறப்பு 1935 - 05 - 07



இறப்பு 2003 - 07 - 21

### அமரர் வையித்தி தோமாஸ்

அன்னாரின் நினைவாக இன்று (20.08.2003) புதன்கிழமை காலை 6.30 மணியளவில் கொஞ்சேஞ்சி மாதா கோயிலில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து, நண்பகலில் எமது இல்லத்தில் இடம்பெறும் எமது தந்தையாரின் அஞ்சலி நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- திருமதி
பிரான்ஸிஸ்கா (மனைவி)
பிள்ளைகள் -
குடும்பத்தினர்.

*70/8, இராஜசிங்கம் வீதி,*
*திருநகர்,*
*யாழ்ப்பாணம்.* (21630) (32-12-18)

## சமய சந்நிதிகளில்

கோப்பாய்,ஓக.20
வடகோவை ஸ்ரீ சக்கராழ்வார் ஆலய உறியடி உற்சவம் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.
இந்நிகழ்வின் போது தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டுக்களான சிலம்பம், தீப்பந்தம் சுழற்றுதல் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறும். (ஓ-10-72)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.20
யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை மாலை 5 மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று உறியடி உற்சவம் இடம்பெறும். (ஓ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.20
இணுவில் கந்தசுவாமி கோவில் கிருஷ்ண ஜெயந்தி விழாவையொட்டி இன்று காலை 8 மணியளவில் ஆலயத்தில் சங்காபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து மாலை 7 மணிக்கு உறியடி உற்சவம் இடம்பெறவுள்ளது. (ஓ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.20
இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு இன்று காலை அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று மாலை 5.45 மணியளவில் உறியடி உற்சவம் இடம்பெறும். (10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.20
பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று கிருஷ்ண ஜெயந்தியும் உறியடி உற்சவமும் இடம்பெறும். (ஓ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.20
சுன்னாகம், மயிலணி ஸ்ரீ முத்து மாரி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது. (ஓ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.20
அளவெட்டி நாகேஸ்வர நாராயணர் ஆலய ரதோற்சவம் இன்று முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும். நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும். (ஓ-6)

## தவறிவிட்டது

சீனியர் ஒழுங்கை, கலட்டியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் பிரசாந் என்பவருடைய தேசிய அடையாள அட்டை நேற்று 19.08.2003 குறிகாட்டுவானுக்கும் சாட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 312 (224), கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள லக்சுமி புத்தக நிலையத்தில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

அடையாள அட்டை விலாசம்:
குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பழை.
பிறந்த திகதி: 26.07.1985
தொலைபேசி இல: 021 222 3090
(21636) (29-12-18-31)

**நாகம்ஸ்** சுன்னாகம்
சரத்குமார், தேவயாணி, நெப்போலியன், விவேக் நடித்த
**தென்காசிப்பட்டணம்**
காட்சி நேரம் : 11.00, 3.00,
**Behind Enemy Lines**
(தாக்குதல் நிறைந்த படம்)
காட்சி நேரம் : இரவு 7.00 மணிக்கு
(31-12-18) (C29232)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
அர்ஜுன், கிரண் நடித்த
**பரசுராம்**
தினசரி காட்சி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
**BLUE STREAK**
தினசரி 8.45 இற்கு.
(C29213) (31-12-18)

**ராஜா** யாழ்ப்பாணம்
எதிர்வரும் 28ஆம் திகதி வரை
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு.
விஜயகாந்த், கிரண், விவேக்
நடித்த

**தென்னவன்**
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
(C29233) (31-12-18)

**லிபேட்டி** அச்சுவேலி

அஜித் இருவேடங்களில், சிம்ரன், விவேக் நடித்த
**வாலி**
(ரீலீஸ்) தினசரி: 3.00, 7.00
காலை 11.00 **THE PEACE KEEPER**
(C/29373) (31-16-18)

## இறுதி வருட பொருளியல்துறை
### மாணவர்களுக்கான அறிவித்தல்

பொருளியல்துறை இறுதிவருட (98/99) மாணவர்களினால் நடத்தப்படும் விருந்துபசார நிகழ்வு நாளை (21.08.2003) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் நடைபெறும்.
*அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*பொருளியல்துறை,*
*யாழ்.பல்கலைக்கழகம்.* (21585) (26-12-18-31) - **வருடப் பிரதிநிதி.**

## ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்
## வெதுப்பி உற்பத்தியாளர் தேவை [பாஸ்]

எமது சங்கத்தால் ஆரம்பிக்கப்படவுள்ள வெதுப்பகத்திற்கு வெதுப்பி உற்பத்தியாளர் (பாஸ்) தேவை. பணிஸ், கல்பணிஸ், கேக், ரஸ்க், பிஸ்கட் தயாரிக்கக்கூடியவர்களாகவும் இருக்கவேண்டும். தகுதியானவர்கள் சேவையை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் தலைமை அலுவலகத்திற்கு சமுகம்தரவும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
பொது முகாமையாளர்,
ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்,
ஊர்காவற்றுறை.

- **பொது முகாமையாளர்.** (C/29651) (29-12-18-31)

## 24ஆவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY



BIRTHDAY

அன்புத் தம்பி
### திரு.எஸ்.ஜே.இராஜேந்திரகுமார்
(உதயசூரியன்)

அவர்களுக்கு
இசையினில் புதிய சுவையை
இதயங்கள் சுதந்தரிக்க
இன்னிசை கானம் எழுப்பிடு
இறைவனின் புனிதம் இளையவர்களில்
இன்றே, உயிர்ப்படையும்.

நிஜமான நினைவுகளுடன்,
அன்பு அக்கா,
எஸ்.எம்.இராஜேஸ்கனி
(கௌசலா).
(21635) (32-12-18-31)

## துயர் பகிர்கின்றோம்

எமது குடும்ப நண்பர்களான
**திரு. திருமதி இராசரத்தினம் - புவனேஸ்வரி தம்பதிகளின்**
**அன்பு மருமகளும்,**
**திரு. கா. குகதாசனின் (நோர்வே) மைத்துனியும்**
**திரு. ஸ்ரீதரனின் (M.S. சுன்னாகம் CEB)**
அவர்களின் பாசமிகு துணைவியுமான,
**புஸ்பாதேவி (விரிவுரையாளர்)** அவர்களின்
திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*கரணவாய் கிழக்கு,*
*கரவெட்டி.* (சி-29650) (31-12-18)
அன்ரன் செல்வராசா
குடும்பம்.

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா யோகம்மா

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கந்தையா யோகம்மா அவர்கள் நேற்று (19.08.2003) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - அபிராமிப்பிள்ளை அவர்களின் மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, இரத்தினம், கதிர்காமர் மற்றும் செல்லம்மா, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மங்களேஸ்வரி, சத்தியேஸ்வரி, சண்முகநாதன் (ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி), யோகராணி, தேவராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் ச.குணரத்தினம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், வாழைச்சேனை கடதாசிக்கூட்டுத்தாபனம்), வீ.குணரத்தினம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், சுகாதார திணைக்களம்), சாரதா, ந.செல்வரட்ணம் (கனடா), செ. அருளானந்தம் (கொலன்ட்) ஆகியோரின் அன்பு மாமியும் சிவகுமார், வசந்தகுமாரி, சசிகுமாரி, சாந்தினி, ஜெயந்தினி, ஜிந்துஜா, வைடூரிகா, வெண்கட்தாசன், தர்மலோஜினி, தர்மகுலராஜா, கோபிகிருஷ்ணா, சரவணபவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டசிரதன், கௌசிரா, அபித்தன், அர்ச்சுதன், அர்ச்சனா, கோஷன், கிரிஷன், கணேசவேல் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2003) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இணுவில் கிழக்கு, சிவன்கோயிலடி குமாரலிங்கம் வீதி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இணுவில் பூவோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குமாரலிங்கம் வீதி,*
*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.* (21634) (31-12-18)

தகவல் :
சண்முகநாதன் (மகன்).

## சோதனை நடவடிக்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ன் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதை நீதிவானின் கவனத்துக்கு பொதுமக்கள் கொண்டு வந்திருந்தனர்.

இதையடுத்து அண்மையில் பொலீஸ் அதிகாரிகளை அழைத்து நீதிவான் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

அவசரகால விதிகளின் கீழ் கடற்படையினரோ, இராணுவத்தினரோ பொதுமக்களைச் சோதனை செய்ய முடியும். தற்சமயம் அவசரகால விதிகள் நடைமுறையில் இல்லை. பொதுமக்கள் பாதுகாப்புச் சட்ட விதிகளின் கீழ் சிவில் நிர்வாகம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தச் சிவில் நிர்வாகத்தின் கீழ் பொதுமக்களைச் சோதனையிடும் பணியை பொலீஸாரே மேற்கொள்ளலாம்; இராணுவத்தினர் அல்லர் கடற்படையினர் பொலீஸாருக்கு அருகில் பணியாற்றலாம் என்று நீதிவான் தெரிவித்தார்.

பொலீஸார் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். எனவே பொதுமக்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்க்க பொலீஸாரே முயற்சிக்க வேண்டும். பொதுமக்களுடன் உறவுகளை எவ்வாறு பேணுவது என்பது தொடர்பான பயிற்சிகளை பொலீஸார்தான் பெற்றுள்ளனர் என நீதிவான் தெரிவித்தார்.

நீதிவானின் உத்தரவுப்படி கடந்த வாரம்முதல் புன்னை, அல்லைப்பிட்டிப் பகுதிகளில் தற்சமயம் பயணிகள் மீதான சோதனை [illegible]க்கைகளை பொலீஸார் மேற்[illegible] ஆரம்பித்துள்ளனர். (ஒ-3)

## புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாயிலிருந்து வன்னிக்கு ஆயுதங்களைக் கொண்டு செல்லும் போதே கைதுசெய்யப்பட்டனர் என்றும் -

தம்மைக் கைதுசெய்தால் சயனைட் அருந்துவதாக அவர்கள் அச்சுறுத்தினர் என்றும் - நீதிமன்றில் பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், தாம் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருக்கும் போதே கைதுசெய்யப்பட்டதாக புலி உறுப்பினர்கள் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் மீட்கப்பட்ட சயனைட் குப்பிகள், அடையாள அட்டைகள் ஆகியவற்றை பொலீஸார், புலிகளின் யாழ்.அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர்.

## புலிகளின் குழு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு நேற்றுப் பிற்பகல் 2மணிக்கு கிளிநொச்சியில் இருந்து ஹெலியில் புறப்பட்டது.

இக்குழுவில் தமிழ்ச்செல்வனுடன தொல்காப்பியன், அலெக்ஸ், நெடியோன், அறிவு, ஜோர்ச் ஆகியோர் சென்றுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகள், போராளிகள் இவர்களை வழியனுப்பி வைத்தனர்.

இதேசமயம், மட்டக்களப்பில் இருந்து நேற்றுப்பிற்பகல் 2.05 மணிக்கு விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணா ஹெலிமூலம் கொழும்புக்குப் புறப்பட்டார். அவருடன் காஸ்ட்ரோ, பாரதிராஜ் ஆகியோர் சென்றுள்ளனர்.

நேற்று மாலை கொழும்பைச் சென்றடைந்த இரு குழுவினருடனும் ஏற்கனவே கொழும்பைச் சென்றடைந்திருந்த விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனும் இணைந்துகொள்வார்.

பாரீஸ் சந்திப்பில் கலந்துகொள்வதற்காகப் புலிகளின் பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன், பொருண்மிய மேம்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் தூயவன் ஆகியோர் ஏற்கனவே பாரீஸ் சென்றுள்ளனர்.

லண்டனில் தங்கியுள்ள புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் பாஸ் சந்திப்பில் கலந்துகொள்ளமாட்டார். அவரின் உடல் நிலைமை காரணமாக ஓய்வு எடுக்குமாறும், பயணங்களைத் தவிர்க்குமாறும் வைத்தியர்கள் அவருக்கு அறிவுறுத்தியுள்ளமையால் அவர் இச்சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை என்று புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், அவரின் வழிநடத்தலுடனும் ஆலோசனையுடனும் இச்சந்திப்பு இடம்பெறும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நாளை ஆரம்பமாகும் பாரீஸ் ஆலோசனைக்கூட்டம் தொடர்ந்து பத்துத் தினங்கள் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பாரீஸ் பயணத்தை முடித்துக் கொண்டு தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு அடுத்தமாதம் 3ஆம் திகதி தாயகம் திரும்பவிருக்கின்றது. (ஒ-3)

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதி தயா சந்தகிரி, பொலீஸ்மா அதிபர் ஆனந்தராஜா, விசேட அதிரடிப் படையின் கட்டளையிடும் அதிகாரி நிமால் குணதிலக்க, உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என். ஜுனைத் ஆகியோரும் கூட்டத்தில் பங்குபற்றினர்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் பாதுகாப்பு நிலைமை மற்றும் அன்றாட வாழ்க்கை நிலை என்பன மிகவும் பாதிப்படைந்துள்ளதுடன் முஸ்லிம்கள் பலவித கொடுமைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர் எனவும் அடிக்கடி முஸ்லிம்கள் மர்மமான முறையில் படுகொலை செய்யப்படுகின்றனர் எனவும் சுட்டிக்காட்டினார்.

இதைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சர் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். தேவையான பாதுகாப்பு நடவடிகைகள் எவையென மாநாட்டில் அடையாளம் காணப்பட்டன.

## 17 படகோட்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களான 15 மீனவர்களை நேற்றுமுன் தினம் இரவும் -

ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்றுக்காலை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இரு இந்திய மீனவர்களை நேற்றும் -

நீதிவான் முன் ஊர்காவற்றுறைப் பொலீஸார் ஆஜர் செய்தனர்.

கடும் காற்றுக் காரணமாக திசைமாறி இலங்கைக் கடற்பகுதிக்குள் தாங்கள் வந்தனர் என்று இந்திய மீனவர்கள் நீதிவானிடம் தெரிவித்தனர்.

எனினும், அவர்களை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த மே மாதம் 23 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின்படி இலங்கைக் கடற்பகுதிக்குள் ஊடுருவும் இந்திய மீனவர்களில் படகோட்டிகள் மீதே சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

இதற்கமைய நெடுந்தீவில் மக்களால் பிடிக்கப்பட்ட 60 மீனவர்களில 15 படகோட்டிகள் மீதே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கடலில் வைத்து இந்தியக் கடற்படையினரிடம் நேற்றுமுன்தினம கையளிக்கப்பட்டுள்ளனர்.

# வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சி

கிளிநொச்சி,ஓக.20

தமிழர் தாயகத்தின் கடைசி மன்னனான பண்டாரவன்னியன் ஆங்கிலேயரின் முல்லைத்தீவுப் படைமுகாமை வெற்றி கொண்ட 200 ஆம ஆண்டு நிறைவையொட்டி வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சி இன்று ஆரம்பமாகவுள்ளது.

தமிழர் வரலாற்றையும், தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றையும் உள்ளடக்கியதான இக்கண்காட்சி தமிழீழ கல்வி கழகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இன்று காலை 9மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி வரை நடைபெறும் இக்கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-5)

## என்.டி.ரி. பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஓக.20

எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெற விருந்த மொறட்டுவப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவக (என்டிரி.) தகுதிகாண்பரீட்சை மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக மொறட்டுவப் பல்கலைக்கழக துணைவேந்தர் அறிவித்துள்ளார். (ஒ-9)

## வீதி நிலைமை மிகமோசம்

தென்மராட்சி,ஓக.20

மட்டுவில் மகாவித்தியாலயத்திலிருந்து மட்டுவில் கல்வம் சிவன் கோவிலுக்குச் செல்லும் வீதி நீண்டகாலமாக திருத்தப்படாமல் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளதால் அவ்வீதி வழியால் வாகனங்களில் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வீதியின் பல இடங்களில் ஜெலைகள் வீழ்ந்து குண்டும் குழியுமாக காணப்படுகிறது. (ஒ-117)

## ஈராக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நூற்றுக்கும் மேற்பட்டோர் அவ்வேளையில் கட்டடத்தில் இருந்ததாகவும் - கூறப்படுகிறது.

தகர்ந்து விழுந்த கட்டடத்தின் இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணி இரவின் இருளில் தொடர்ந்தது. (ஒ)

## முஸ்லிம்களின் அபிலாஷை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வதற்காகப் புறப்பட்டுச் செல்ல முன்னர் நேற்றுமுற்பகல் கிளிநொச்சியில் செய்தியாளர்களிடம் அவர் உரையாடினார். அப்போதே மேற்கண்ட தகவலை அவர் வெளியிட்டார்.

இடைக்கால நிர்வாகம் பற்றிய வரைவுக்கு இறுதிவடிவம் கொடுக்கும் வகையில் தமது இந்தப் பயணம் அமைவதாக அவர் குறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்கைத் தாயகமாகக் கொண்ட அனைத்து மக்களுக்கும் நன்மை அளிக்கக் கூடிய வகையில் இந்த நிர்வாக அமைப்பு இருக்கும் என்றார் அவர்.

"நாங்கள் எமது மக்களின் அபிலாஷைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் அமைவான திட்டத்தினை முன் வைக்க உள்ளோம். அதை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளும் என நிச்சயமாக நம்புகிறோம்" எனவும் அவர் சொன்னார்.

"அமையப்போகின்ற இந்த இடைக்கால நிர்வாக அலகில் வடக்கு - கிழக்கு முஸ்லிம் மக்களுடைய அபிலாஷைகளும் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் கருத்தில் எடுக்கப்படும்" - என்று அவர் குறிப்பிட்ட போது "வடக்கு - கிழக்கில் உள்ள சிங்கள மக்களின் நிலை என்ன? என்று செய்தியாளர்கள் வினாத்தொடுத்தனர்.

"வடக்கு - கிழக்கைத் தாயகமாகக் கொண்ட அனைத்து மக்களுக்கும் நன்மை அளிக்கக்கூடிய வகையில் தான் இந்த இடைக்கால நிர்வாக அமைப்பு இருக்கும்" - என்று உறுதிபட பதிலளித்தார் தமிழ்ச்செல்வன். (ஒ-3)


**LLION AIR**
லயன் ஏயர்
தினமும் காலையும் மாலையும் பாதுகாப்பான கொழும்பு விமான பயணத்திற்கு,
GENERAL SALES AGENT
&
HANDLING AGENT,
90, KANTHAPPASEGARAM ROAD,
JAFFNA.
Tel : 021 - 222 2504, 021 - 222 2823
Fax : 021 - 222 2040
அவசர தொடர்புக்கு
HOTLINE : 0777 - 382343
0722 - 401423.
(C29318) (12-18-29)

**கணக்கீடு**
**A/L DAY CLASS**
ஆரம்பம்:-வியாழன் 11a.m
★ அலகு ரீதியான துரித மீட்டல் வகுப்புகள்
★ அவரவர் விருப்பத்திற்கமைய அலகு தொடங்க தனியான நேர ஒழுங்கு
★ "உங்கள் தேவையே எனது சேவை"
"எத்தனை மாணவர்கள் படித்தார்கள் என்பதைவிட என் மாணவன் என்ன பெறுபேறு பெற்றான் என்பதே எனக்குப் பெருமை".
**S.தவா**
B.Com(Hons) (Acc.Spl.)
NEW SCIENCE COLLEGE
(21627) (32) JAFFNA

**பதவி வெற்றிடங்கள்**
கணனி நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
01) **Hardware Technician**
02) **Clerk**
03) **Instructor** (Computer Programming MS Office)
விளம்பர இல: 1992
உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (21595)

BIT
324 Palaly Rd., Jaffna.
1st Semester New Batches Commence on
Weekend: 23rd August at 10.00 a.m
Weekday: 29th August at 04.30 p.m

Special offer for the first 10 Joiners
* 50% off in Course Fee
* Free ACS Module
* Free to follow Two Diploma Courses
→Printed Notes
→Library Facilities
→Qualified Lecturer Panel
Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project


## மரண அறிவித்தல்கள்

### நாகப்பர் கிட்டினர்

(புராண விரிவுரையாளர்)

வரணி, மாசேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகப்பர் கிட்டினர் நேற்று (19.08.2003) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் நாகராஜா, நாகேஸ்வரன், நாகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் நவரத்தினம்,மல்லிகாதேவி, சறோஜினிதேவி ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (19.08.2003) செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் மாசேரி மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாசேரி,*
*வரணி.*

தகவல்:
(21639) (29-18-12) கி.நாகேஸ்வரன் (மகன்)

### திருமதி கந்தையா அன்னலட்சுமி

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த திருமதி கந்தையா அன்னலட்சுமி அவர்கள் 18.08.2003 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.08.2003) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, காலை 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய ஆஸ்பத்திரி வீதி,*
*கரவெட்டி மேற்கு,*
*கரவெட்டி.*

தகவல் :
க.தர்மலிங்கம் (மகன்).
(சி-29642) (31-12-18)






இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# குடாநாட்டை அச்சுறுத்தும் போதை

தொன்று தொட்டே கந்தபுராணக் கலாசாரம் மிக்கதாகப் போற்றிப் புகழப்பட்டு வந்தது யாழ்ப்பாணம். தமிழர்களின் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களின் மொத்த வடிவமாகவும் அது விளங்கியது. இதற்குப் பல சான்றுகளும் ஆதாரங்களும் இன்னும் உள.

இத்தகைய உன்னத நிலையில் இருந்த யாழ். மண், இப்போது கலாசாரச் சீரழிவுகளிலும் சட்டவிரோதச் செயல்களிலும் சிக்கித்தவிப்பது அனைவருக்கும் ஆச்சரியம்தான்.

ஒரு சமூகத்தை அதன் தடயங்கள் எதுவுமின்றி அடியோடு மாற்றக் கூடிய உலக நாடுகளில் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்ற போதைவஸ்துப் பாவனையும் யாழ். மண்ணிலும் காலூன்றுகிறதென்றால் இனி யாழ்ப்பாணத்தின் நிலை என்ன?




யாழ். நகரப்பகுதியில் உள்ள கடைகளில் மது வரித்திணைக்கள உத்தியோகத்தர்கள் அண்மையில் மேற்கொண்ட திடீர் சோதனையில் பல அதிர்ச்சித்தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரச அங்கீகாரம் இல்லாமலும், அரச தீர்வைக்குட்படுத்தபடாமலும வெளிநாடுகளில் இருந்து கடத்திவரப்பட்ட பெருமளவிலான பீடி, சிகரெட் போன்ற போதையூட்டும் புகைப் பொருள்கள் யாழ். நகரில் உள்ள பிரபல கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வந்தமைதான் அந்த அதிர்ச்சித் தகவல்.

உடல் நலத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய போதை மருந்துகள் கலந்து இப்புகைப்பொருள்கள் தயாரிக்கப்பட்டுள்ளமை பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் போதைவஸ்துப் பாவனையென்பது இப்போது புதுமையானதொன்றாகவே கருதப்படுகின்றது. முன்னர் யுத்தத்தினால் பல கோரவடுக்கள் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டபோதும் போதைப் பாவனைக்கு எமது மக்கள் அடிமையாகவில்லை. 1995ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப் பகுதியில் போதைப் பாவனையென்பது குடாநாட்டில் அறிமுகமில்லாத விடயம்

எனினும், 1996ஆம் ஆண்டில் யாழ். குடாநாட்டை இராணுவம் கைப்பற்றியது முதல் 2002ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியது வரை பல சமூக கலாசார சீரழிவுச் சம்பவங்கள் இங்கு நடந்தேறின என்பது உண்மைதான். அந்தக் காலப்பகுதியில் போதைப் பாவனை பற்றி அவ்வபபோது சில தகவல்கள் இருந்தபோதும் எச்சரிக்கை விடுமளவுக்கு அதன் பாரதூரம் உணரப்பட் டிருக்கவில்லை.

2002ஆம் ஆண்டு ஏப்ரல் 8ஆம் திகதி யாழ். குடாநாட்டையும் தென்னிலங்கையையும் இணைக்கும் ஏ-9 தரைவழிப்பாதை திறக்கப்பட்டது. இதனையடுத்து யாழ். குடாநாட்டைப் பார்வையிடுவதற்கு பெருமளவிலான தென்னிலங்கை மக்கள் யாழ். வந்தனர். அதேபோல் எமது மக்களும் தரைவழிப்பாதை வழியாக தென்னிலங்கைக்குச் சென்றனர். இதன் பின்னர் யாழ். குடாநாட்டில் உருவாகிய சிறந்த சந்தை வாய்ப்பைப் பயன்படுத்தி அனைத்துப் பொருள்களும் யாழ். குடாநாட்டை நோக்கி விரைந்தன.

சிங்கள, முஸ்லிம் வியாபாரிகளும் யாழ். குடாநாட்டில் அதிகளவில் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். இத்தகையதொரு சூழலை சாதகமாகப் பயன்படுத்தி சில தீய சக்திகள் யாழ். குடாநாட்டுக்குள் போதைப்பொருள்களை கடத்த முயற்சி செய்கின்றதான சந்தேகம் எழுந்துள்ளது.

ஏ-9 தரைவழிப்பாதையூடாக வியாபாரப் பொருள்களைக் கொண்டு வரும் தோரணையில் இச்சட்டவிரோத புகைப் பொருள்கள் யாழ். குடாநாட்டுக்குக் கொண்டுவரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தரமான சிறந்த புகைப் பொருள்கள் போல இவை அழகாகப் பொதிசெய்யப்பட்டும் வேறு பொருள்களுக்குள் மறைத்துவைக்கப்பட்டும் இவை கடத்தி வரப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**ராஜராஜன்**

இதனைவிட கடல் மார்க்கமாகவும் இப்போதைப் பொருள்கள் யாழ். குடாநாட்டுக்குள் வந்தடைகின்றன எனவும் சந்தேகம் தெரிவிக்கின்றனர் அதிகாரிகள்.

இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் சட்டவிரோதமான முறையில் தயாரிக்கப்படும் புகைப் பொருள்கள் சிலவும் அண்மையில் யாழ். குடாநாட்டில் மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடல் மார்க்கமாக இப்பொருள்கள் யாழ். குடாநாட்டுக்குள் வருகின்றதென்றால் அதற்கு உடந்தையாக உள்ளவர்கள் யார்?

கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள கரையோரப் பிரதேசங்கள் ஊடாக இவை எவ்வாறு உள்ளே வருகின்றன. இளம் சந்தியினர் மத்தியில் காணப்படும் சட்டவிரோத போதைப் பாவனையால் இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளே திணறுகின்ற நிலையில் யாழ்ப்பாணம் எவ்வாறு இதற்கு முகம் கொடுக்கப் போகின்றது?




இவற்றைவிட வெளிநாடுகளில் தயாரிக்கப்படும் உயர்ரக சிகரெட்டுகளை 'மல்போறா', 'பென்ஷன் அன்ட் ஹெட்ச்' ஆகியவையும் இங்கு மிகக் குறைந்த விலையில் விற்கப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவை அரச தீர்வைக்குட்படுத்தப்படாமல் இங்கு எடுத்துவரப்பட்டுள்ளன. அரச தீர்வைக்குட்படுத்தப்படாமல் இவை எவ்வாறு யாழ். குடாநாட்டுக்குள் வந்தன என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது.

யாழ். குடாநாட்டு இளைஞர்களின் வாழ்வைச் சீரழிக்கப்போகும் இப்பிரச்சினையை சமூகத்தில் அக்கறையுள்ளவர்கள் ஏன் இன்னும் இனம் கண்டுகொள்ளவில்லை.

சில சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுவதால் இந்த விடயத்தில் மிகுந்த அவதானமும் விழிப்புணர்வும் தேவை

எவ்வாறாயினும், எமது இனத்தின் பாதுகாவலர்கள் என்ற வகையில் இதனை அடியோடு அகற்றவேண்டிய தேவை சம்பந்தப்பட்டவர்களுக்கு உள்ளது. இது விடயத்தில் அவர்கள் விரைந்து செயற்படவேண்டுமென மக்கள் விரும்புகின்றார்கள்.

இல்லையேல், எமது கலாசாரப் பண்பாட்டு விழுமியங்கள் குழிதோண்டிப் புதைக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டு வளாவிருக்கும் நிலை நோக்கி நாம் நகர்த்தப்படுவோம். கைப்பற்றப்பட்ட புகைப் பொருள்கள் ஆய்வுசெய்யப்பட்டு அவை உடல் நலத்திற்குக் கடுமையாகத் தீங்கை விளைவிக்கக்கூடியவை என இனங் காணப்பட்டுள்ளன. அவை உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படுவதுடன் யாழ். குடாநாட்டில் அவற்றை விற்பனை செய்தவர்களையும தீவிர விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்.

யாழ். குடாநாட்டு மக்களின் வாழ்க்கையைச் சீரழிக்கும் இத்தகைய நடவடிக்கைகளைக் கண்டறிவதில் மதுவரித் திணைக்கள அதிகாரிகளும் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருவது மிகவும் பாராட்டுக்குரியது. இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளை இனங் காண்பதில் அவர்கள் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் ஈடுபடவேண்டும் என்பது தான் மக்களின் விரும்பமும் கூட. தம் கடமையை அவர்கள் உண்மையாகவும் நேர்மையாவும் நிறைவேற்றுவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

எது எவ்வாறாயினும் போதைப் பொருள் பாவனையை இங்கிருந்து முற்றாக ஒழிக்கவேண்டுமென்பதும் அதன் அறிமுக கர்த்தாக்கள் யாரென இனங்காணப்பட்டு அவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படவேண்டும் என்பதும் காலத்தின் தேவை.

## தொலைக்கல்வி நிலையங்களுக்கு யாழ். குடாநாட்டில் இணைய வசதி!

யாழ்ப்பாணம்,ஓக.20

யாழ். குடாநாட்டில் உள்ள தொலைக்கல்வி நிலையங்களுக்கான இணைய வசதிகளைப் (Internet Connection) பெற்றுக்கொடுக்கும் முகமாக கொழும்பிலுள்ள தொலைக் கல்வி நிலையத்தின் இணைப்பாளர் மற்றும் கணக்காளர் ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்று யாழ்.வந்தனர்.

யாழ்.குடாநாட்டில் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான தொலைக் கல்வியை மேம்படுத்தும் முகமாக இவ் வசதி மேற்கொள்ளப்படவுள்ளதாக இக்குழுவினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் உள்ள தொலைக்கல்வி நிலையங்களுக்கு விஜயம் செய்த இக்குழுவினர் இணைய வசதிகளை மேற்கொள்வதற்கான கணனி உபகரணங்களை வழங்கி அதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

முதலாவது இணைய இணைப்பு யாழ்.மாவட்ட செயலகத்தில் உள்ள தொலைக்கல்வி நிலையத்திற்கு நேற்று உடனடியாக வழங்கப்பட்டது. மற்றைய நிலையங்களுக்கான இணைப்புக்களும் விரைவில் வழங்கப்படவுள்ளன எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது. (ம-8)

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்,ஓக.20

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் 7ஆவது ஆண்டு நிறைவும் சிறுவர்களின் ஒன்றுகூடலும் எதிர்வரும் 23ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். நாவலர் வதியில் உள்ள நாவலர் பாடசாலையில் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-ரி)

## கலந்துரையாடல்

அனைத்துப் பல்கலைக்கழகங்களின் ஊழியர் தொழிற்சங்கச் சம்மேளனத்தின் வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை 9.30 மணிக்கு பல்கலைக்கழக இராமநாதன் மண்டப முன்றிலில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல போதனைசாரா ஊழியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஊழியர் சங்கத்தின் தலைவர் சி.தங்கராஜா கேட்டுள்ளார்.

இதேவேளை -

தமது வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றபோதும் பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களின் நலன்கருதி நீர் விநியோகம் மற்றும் பாதுகாப்புப் பணிகள் மட்டும் இடம்பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

## கைதடி நவபுரம் பகுதியில் தற்காலிக இராணுவ முகாம்

கைதடி,ஓக.20

கைதடி, நவபுரத்தில் உள்ள மாதுவில் எனும் பயிர்ச் செய்கைப் பிரதேசத்தில் இலங்கை இராணுவத்தினர் கடந்த 13ஆம் திகதி இரவு தொடக்கம் தற்காலிக முகாம் அமைத்துத் தங்கியுள்ளனர். 25இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் தொடர்ந்தும் அங்கு தங்கி இருப்பதால் இப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இராணுவம் இங்கு தங்கியிருப்பதால் அங்கு இம்முறை பயிர்ச்செய்கையில் ஈடுபடமுடியாத நிலை ஏற்படக்கூடும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இது தொடர்பாக கண்காணிப்புக் குழு, மனித உரிமைகள் ஆணைக் குழு என்பவற்றுக்கு இப்பகுதிமக்கள் கையெழுத்திட்டு மகஜர்களை அனுப்பியுள்ளனர்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னரும் இப்பகுதியில் இராணுவத்தினர் அடிக்கடி தற்காலிக முகாம் இட்டு வந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். எனினும், இம்முறை அவர்கள் அங்கு நிரந்தரமாகத் தங்கக்கூடும் என்று அப்பகுதி மக்கள் அச்சம் கொண்டுள்ளனர். (ம-75)

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஓக.20

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் இலவச மருத்துவ முகாம் மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் நீரிழிவு, இரத்த அழுத்தம், வாய்புற்று நோய் மற்றும் கண்பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்று கழகத் [illegible] செயலாளர் லயன் எஸ். சற்[illegible] தவன் தெரிவித்துள்ளார். (ம-10)



இராணுவத்துக்கு 5ஆயிரம் பேரைத் திரட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நேர்முகத் தேர்வுக்கு சமுகமளித்திருந்த சிலரில் 21 வயதான சேனாரத்னவின் உயரத்தை அளந்து பார்க்கிறார் இராணுவப் பொலீஸ் அதிகாரி.

## குடாநாட்டு இளைஞர், யுவதிகளின் ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்காக மாகாண அமைச்சு ரூ.50ஆயிரம் நிதியுதவி

யாழ்.குடாநாட்டில் உள்ள இளைஞர் யுவதிகளின் ஆங்கில அறிவை மேம்படுத்தவென வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சின் இளைஞர் பிரிவு யாழ்.இளைஞர் சேவைகள் மன்றத்துக்கு 50ஆயிரம் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளது.

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் த.சிவதட்சணாமூர்த்தி இதனைத் தெரிவித்தார்.


யாழ்மாவட்டத்தில் உள்ள இளைஞர், யுவதிகளின் ஆங்கில அறிவை மேம்படுத்தும் நோக்குடன் கோப்பாய், கரவெட்டி, இணுவில் ஆகிய மூன்று இடங்களில் உள்ள இளைஞர் கழகங்களில் முதற்கட்டமாக ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

18 வயது தொடக்கம் 29 வயதுற்கு உட்பட்ட இளைஞர், யுவதிகள் இப்பயிற்சி நெறியைத் தொடரலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு ஆறுமாத பயிற்சி வழங்கப்பட்டு இறுதியில் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

பயிற்சி நெறியை கற்க விரும்பும் இளைஞர், யுவதிகள் மேற் குறிப்பிட்ட இளைஞர் கழகங்களுடன் தொடர்புகொண்டு பயிற்சிநெறியை கற்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-ரி)

# இப்போது

## விசேட மருத்துவ ஆலோசனைச் சேவை எல்லா ஜனசக்தி கிளைகளிலும்



நாடு முழுவதிலுமுள்ள 93 ஜனசக்திக் கிளைகள் புதிய காப்புறுதித் தீர்வுகளையும் வசதிகளையும் மாத்திரமல்ல, இப்போது மக்களின் மிக முக்கிய தேவைக்கும் பரிகாரம் வழங்குகின்றன.

விசேட மருத்துவ ஆலோசனைக்கு
இலகுவான வழி

500க்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்களில் ஒருவரைச் சந்தித்து ஆலோசனை பெறுவதற்கான வசதியை ஜனசக்தி கிளைகள் பெற்றுத் தருகின்றன.

ஆசிரி, டேர்டன்ஸ்,
நவலோக அல்லது ஓஅசிஸ்

ஆகிய மருத்துவமனைகளில் மருத்துவர்களைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கிக்கொள்ள முடியவில்லையே என்ற அங்கலாய்ப்பும் இல்லை.

தனது காப்புறுதி நடவடிக்கைகளுக்கு ISO 9002 அங்கீகாரம் பெற்ற ஜனசக்தி, மக்களுக்காகவும் அவர்களின் தேவைகளுக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, முன்னோடியான மருத்துவ IT கம்பனியுடன் கைகோர்த்து இந்த ஈ–செனலிங் நற்காரியத்தில் இணைந்து கொள்கிறது.

எனவே எமது தலைமை அலுவலகத்திற்கு அல்லது 93 ஜனசக்தி கிளைகளில் ஒன்றுக்குச் சென்று உங்கள் விசேட நிபுணத்துவ மருத்துவரைச் சந்திப்பதற்கான தினத்தை ஒதுக்கிக் கொள்ளுங்கள்

Q & E Advertising

e CHANNELLING
www.eChannelling.com

ஜனசக்தி இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்
பொது காப்புறுதி அலுவலகம் : 46, முத்தையா வீதி, கொழும்பு 2.

JANASHAKTHI
INSURANCE

# பாவனைக்குதவாத பொருள்களின் சந்தையாக மாறிவரும் யாழ்ப்பாணம்

## தடுத்துநிறுத்த அவசர நடவடிக்கை தேவை என்கிறார் சட்ட விரிவுரையாளர்

அச்சுவேலி,ஓக.20

யாழ்ப்பாணம், பாவனைக்கு உதவாத பொருள்களின் விற்பனைச் சந்தையாக மாறிவருகின்றது. சமகால சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி நடைபெற்றுவரும் இந்த வர்த்தகத்தினால் மக்களின் வாழ்வில் எதிர்பாராத பக்கவிளைவுகள் ஏற்படவாய்ப்புண்டு.

இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு சகல தரப்பினரும் உடனடியாக தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு கூறினார் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட சிரேஷ்ட விரிவுரையாளர் சட்டத்தரணி அருள் கணேசலிங்கம்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர்களில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு செயற்றிட்ட இணைப்பாளர்களுக்கான வதிவிடப்பயிற்சி முகாம் அண்மையில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெற்றது.

அமர்வில கலந்துகொண்டு அருள் கணேசலிங்கம் நுகர்வோர் பாதுகாப்புப் பற்றி கருத்துரை வழங்கினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட யாழ்மாவட்ட மக்களின் வாழ்க்கை சமகால அமைதிச் சூழலைப் பயன்படுத்தி திட்டமிட்டு சிதைக்கப்படுவதை அவதானிக்கமுடிகின்றது.

யாழ்.மாவட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்ட விதிமுறைகள் அப்பட்டமாக மீறப்படுகின்றன. இதனைத தடுத்துநிறுத்த யாரும் முன்வருவதாகத் தெரியவில்லை.

தென்னிலங்கை நகரங்களில் விற்பனைசெய்யமுடியாத பொருள்களின் விற்பனைச் சந்தையாக யாழ்ப்பாணம் மாற்றப்பட்டுள்ளது. நடைபாதை வியாபார நிலையங்களில் இருந்து வர்த்தக நிலையங்கள் வரை பாவனைக்கு உதவாத பொருள்கள் பல மிகக்குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதைக் காணமுடிகின்றது.

தென்னிலங்கை நகரங்களில் முற்றாக தடைசெய்யப்பட்டு விற்பனை செய்யமுடியாத பொருள்கள், போலிக கம்பனிகளின் தயாரிப்புக்கள், காலாவதியான பொருள்கள், தரக்கட்டுப்பாட்டு விதிகளுக்கு முரணான தயாரிப்புக்கள் தாராளமாக யாழ்ப்பணத்தில் விற்பனை செய்யப்படுகின்றன.

சிலபொருள்கள் கொழும்பு நகரத்தில் விற்பனை செய்யப்படும் விலைகளிலும் மிகவும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன என்பதும் கவனத்துக்குரியது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் புதிய பொருள்கள், விலைகுறைவான பொருள்களை கூடியளவில் பயன்படுத்துகின்றனர். இதனால் அவர்களுக்குப் ஏற்படப்போகின்ற பக்கவிளைவுகளை அவர்கள் உணரவில்லை.

தீப்பெட்டியில் இருந்து சாதாரண ஷம்போ வரை பலபொருள்கள், உணவுப் பண்டங்கள் பாவனைப் பொருள்கள் என பல்வேறு பொருள்களும் நுகர்வோர் பாதுகாப்பு சட்ட விதிமுறைகளுக்கு புறம்பான முறையில் தரக்கட்டுப்பாடு விதிகளுக்கு முரணாக தயாரிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்வதற்கென தென்னிலங்கையில் இருந்து எடுத்துவரப்படுகின்றன.

சாதாரண மனிதப் பாவனைக்கு உதவாத நஞ்சு, இராசாயனக் கலவைகள் சேர்ந்த பொருள்களும் பெருமளவில் விற்பனை செய்யப்படுகின்றன.

சமகாலச் சூழலில் காணப்படும் நிர்வாகச் சீர்குலைவு யாழ்ப்பாணத்தில் தற்பொழுது காணப்படும் வர்த்தகச் சூழலுக்கு சாதகமாக அமைந்துள்ளது.

இந்தநிலை தொடருமானால் யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள பாதிப்பிலும் மிகப்பெரிய பாதிப்பும் பக்கவிளைவும யாழ்ப்பாண மக்களுக்கு ஏற்படும். இதனைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினர் பொருத்தமான முன் முயற்சிகளில் ஈடுபடவேண்டும். மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை தடுத்து நிறுத்தவேண்டும் எனக் கூறினார். (ம-11)

## மதகைப் புனரமைக்க கோரிக்கை

காரைநகர்,ஓக்.20

காரைநகர் வடமேற்கில் உள்ள அறுமனாவோடை வாய்க்கால் மற்றும் மதகினைப் புனரமைத்து மதகுக்கு பலகை இடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி விவசாயிகள் காரைநகர் உதவி அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரைநகர் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற பெரும்போக நெற்செய்கை தொடர்பான கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

கடந்த காலங்களில் இந்த நன்னீர் தடுப்பணைக்கு மண்மூடை அமைத்தே நீரினைக் கட்டுப்படுத்தியதாகவும் ஒவ்வொரு வருடமும் அவ்வாறு செய்யவேண்டி உள்ளதால் அதற்கு நிரந்தரமாக பலகை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.(ம-73)

## கடற்றொழிலாளர் சமாசங்களின் ஒன்றியம் விரைவில் அமைப்பு

### மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதே நோக்கம்

அரியாலை,ஓக.20

யாழ். மாவட்டத்தில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் ஒன்றியம் என்ற புதிய அமைபபு ஒன்று எதிர்வரும் 28ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளதாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கனகசபாபதி தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை பத்து கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசங்களே கூட்டுறவுத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

ஏனைய சமாசங்கள் பதிவுகளை மேற்கொள்ளவில்லை.

திணைக்களத்தில் பதிவுசெய்த சமாசங்களைக் கொண்டு இந்த புதிய அமைப்பு உருவாக்கப்படும். மாவட்டத்தில் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்குடன் இந்த புதிய அமைப்பு செயற்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## தமிழ்-முஸ்லிம் உறவை மோசமடையச் செய்யும் நிகழ்வுகள் எமது பொறுமையை சோதிக்கின்றன

### அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

நிந்தவூர்,ஓக.20

தமிழ் - முஸ்லிம் உறவைப் பிரிக்காமல் பார்த்துக்கொள்வதற்காக வேண்டத்தகாத நிகழ்வுகள் இடம்பெறும் போதெல்லாம் அவை குறித்து மிகவும பொறுமையுடன் நடந்து கொண்டிருககின்றோம். ஆனால், எமது பொறுமை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சோதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

- இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

சம்மாந்துறையில் இடம்பெற்ற இரு முஸ்லிம்களின் படுகொலைச் சம்பவம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சம்மாந்துறைக்கு விஜயம் செய்த அமைச்சர், உயிரிழந்தவர்கள் இருவரதும் ஜனாஸாக்கள் நல்லடக்கத்திலும் பாதுகாப்புத் தொடர்பான கூட்டம் ஒன்றிலும் கலந்துகொண்டார். அதன் பின்னர் கருத்து வெளியிடுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:-

சம்மாந்துறையில் இடம்பெற்றுள்ள படுகொலைகள் முஸ்லிம்களின் பாதுகாப்புக் குறித்த பாரிய அச்சுறுத்தலை மீண்டும் ஒருமுறை உருவாக்கியுள்ளது.

குறிப்பாக விவசாய அறுவடைக் காலம் என்பதால் முஸ்லிம்களின் பொருளாதாரத்தை இலக்கு வைத்து செய்யப்படுகின்ற ஒரு நடவடிக்கையாகவும் இந்த அச்சுறுத்தல்கள் கருதப்படுகின்றன.

இப்படியான அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல்கள், படுகொலைகள் ஆகியவற்றின் மூலம் இந்தச் சந்தர்ப்பத்தில் ஆத்திரமடையாமல் முஸ்லிம்கள் தமக்கு எதிரான சக்திகளின் முயற்சிகளை படுதோல்வியடையச் செய்வதற்கு அரசு பூரண ஒத்துழைப்பை நல்கவேண்டும்.

அரசுதான் முஸ்லிம்களுடைய பாதுகாப்பிற்குப் பூரண உத்தரவாதம் கொடுக்கவேண்டும். இதில் நாங்கள் மிகவும் உறுதியாகவுள்ளோம்.

விடுதலைப் புலிகளிடத்தில் மீண்டும ஒரு வினயமான வேண்டுகோளை விடுக்க விரும்புகிறோம். இவ்வாறான படுகொலைச் சம்பவங்கள், அநியாயங்கள் ஆகியவை இடம்பெறும்பொழுது 'நாங்கள் இவற்றுக்குப் பொறுப்பல்ல' என்று ஒரு நழுவல் போக்கை புலிகள் கடைப்பிடிப்பது முஸ்லிம்களைப் பொறுத்தவரை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமல்ல.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திலும் புரிந்துணர்வு உடன்படிக்கையிலும் ஏற்றுக்கொண்ட விடயங்கள் பலவற்றை புலிகள் மீறியிருக்கின்றனர். இவற்றையெல்லாம் நாங்கள் செய்யவில்லையென்று மறுப்பதன் மூலம் மட்டும், இந்த விடயத்தில் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்து முஸ்லிம்கள்தான் இத்தகைய விடயங்களில் ஆத்திரமடைபவர்கள், குழம்புபவர்கள் என்ற நிலைமைக்குத் தள்ளுகின்ற ஓர் உபாயத்தைப் புலிகள் அடிக்கடி கையாண்டு வருகின்றனர்.

இவற்றையெல்லாம் விடுதலைப் புலிகள் கைவிடவேண்டும் என்று வினயமுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

அரசியல் ரீதியாக ஸ்ரீலங்கா முஸலிம் காங்கிரஸ் சில அழுத்தமான நடவடிக்கைகளில் இறங்கவிருக்கின்ற ஒரு முன்னெச்சரிக்கையையும் இந்த வேளையில் நான் விடுக்கின்றேன்.

- இவ்வாறு அமைச்சர் கூறியுள்ளார்.

## திருமலை எண்ணெய் குதங்கள் பற்றி பேச கதிர்காமருக்கு அருகதை இல்லை

### இரா.சம்பந்தன் எம்.பி. தெரிவிப்பு

திருகோணமலையின் எண்ணெய்க் குதங்கள் குறித்தோ அல்லது இந்தியாவின் நலன்கள் குறித்தோ பேசுவதற்கு லக்ஷ்மன் கதிர்காமருக்கு எத்தகைய அருகதையும் இல்லை. அவரின் இந்த நடவடிக்கை கேலிக்குரியது.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

"தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் குறித்து யதார்த்த பூர்வமான கருத்து எதனையும் இதுவரை தெரிவிக்காத லக்ஷ்மன் கதிர்காமர், 'இந்தியாவின் நலன்குறித்து அக்கறை கொள்வது வேடிக்கையானது. அமெரிக்காவுக்கு எண்ணெய்க் குதங்களை வழங்க நடவடிக்கை எடுத்து, வெளிநாட்டு வாணிபம் உயரும் எனத் தெரிவித்த கதிர்காமர், இந்திய நலன் குறித்துப் பேசுவது நகைப்புக்கு இடமனதாகும்" என்றும் சம்பந்தன் மேலும் தெரிவித்தார். (ம-9)

## எவ்வளவு காலம் பணிபுரிந்தோம் என்பதல்ல மக்களுக்கு என்ன செய்தோம் என்பதே முக்கியம்

### வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலர் உரை

யாழ்ப்பாணம்,ஓக.20

அரச சேவையில் எவ்வளவு காலம் பணிபுரிந்தோம் என்பது முக்கியமல்ல. எமது சேவைக் காலத்தில் மக்களுக்கு நன்மை பயக்கும் விடயங்களைச் செய்தோமா? என்பதுதான் முக்கியம்.

- இவ்வாறு தெரிவித்தார் வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன்.

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவியாளர்கள் மற்றும் சனசமூக அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோருக்கான சேவை உருவாக்கம் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இன்று உள்ள சூழ்நிலையில் பட்டதாரி அலுவலர்கள் மனமாற்றம் அடைந்து மக்கள்பணி ஆற்றுவார்களேயானால் கடந்த 25 வருட காலத்தில் ஏற்பட்ட பின்னடைவை குறுகிய காலத்தில் அபிவிருத்தி செய்து விடலாம்.

இதனைவிடுத்து அரசில் எவ்வளவு காலம் சேவை செய்யலாம் என்று கணக்குப்போட்டுக் கொண்டிருந்தால் அரசிற்கும் பயனில்லை மக்களுக்கும பயனில்லை.

உள்ளூராட்சி மன்றம் ஊடாக நாம எதிர்காலங்களில் மிகப்பயனுள்ள திட்டங்களை முன்வைக்கப்போகின்றோம்.

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திற்கும் பட்டதாரி தரத்திலான உள்ளூராட்சி உதவியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களது கைகளில் திட்டமிடல பிரிவு ஊடாக சகல அதிகாரங்களும வழங்கப்படும்.

யுத்தத்தினால் அழிவடைந்த எமது வடக்கு-கிழக்கு மீள்பொருளாதார கட்டுமானப் பணிகளுக்கு சேவை செய்ய இறைவன் உங்களுக்கு கதிரைகளைத் தந்துள்ளான்.

எனவே, இந்தப் பயனுள்ள காலத்தில் 24 மணிநேரமும் சேவை செய்ய பட்டதாரி உத்தியோகத்தர்கள் மட்டுமல்ல அனைத்து அலுவலர்களும் முன்வர வேண்டும். (ம-10-185)




உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி.மேற்கு பிரதேச சபையும் சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடத்திய விளையாட்டு நிகழ்வில் கலந்துகொண்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். (ம-10)

## பயிலுநர் ஆசிரிய சேவைக்காலத்தை நிரந்தர சேவையில் கணிக்கத் தீர்மானம்

### கல்வி அமைச்சு அனுமதி வழங்கியது

பயிலுநர் ஆசிரியர்களாக மற்றும் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களின் சேவைக் காலத்தை ஆசிரியர் சேவையின் நிரந்தர சேவைக் காலமாக கணிப்பீடு செய்வதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

கல்வி அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகளைச் சந்தித்து ஆசிரிய சங்கங்களின் பிரதிநிகள் நடத்திய கலந்துரையாடலில் பயிலுநர் ஆசிரியர், பட்டதாரிப் பயிலுநர் ஆகியோரின் சேவைக் காலத்தை ஆசிரியர் சேவைக் காலமாகச் சேர்த்துக்கொள்வது என்ற தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்தத் தீர்மானம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான சேவைக்காலத்துக்கான நிலுவைச் சம்பளத்தை வழங்குவது தொடர்பான செயற்பாடு நிதி நிலைமைகளினால் சீர்படுத்த முடியாமல் இருப்பதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சேவைக் காலத்தைக் கருத்திற்கொண்டு சேவையால் கிடைக்கக் கூடிய சலுகைகள், உரிமைகள் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

பயிலுநர் ஆசிரியர், பட்டதாரிப் பயலுநர் ஆசிரியர் சேவைக்காலத்தை நிரந்தரசேவைக் காலமாக்குவதன் மூலம் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் சேவைக்காலத்தின் மூப்பினால் பெறக்கூடிய சலுகைகள், உரிமைகளைப் பெறவுள்ளனர் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார். (ம-11)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

வலி.வடக்கு.ஓக.20

தீவக கல்வி வலயத்துக்குட்பட்ட சுகாதாரமும் உடற்கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் வேலணையில் அமைந்துள்ள வள நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

ஆண்டு 6 முதல் 11 வரையான வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கணிப்பீடு தொடர்பான விடயங்கள் இச்செயலமர்வில் இடம்பெறவுள்ளன.

இப்பாடத்தைக் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களையும் செயலமர்வில் கலந்துகொள்ளும்படி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.மகாலிங்கம் வேண்டியுள்ளார். (ம-86)



அளவெட்டி - நாகேஸ்வரம்

# ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலய தேர்த்திருவிழா சிறப்பிதழ் 20.08.2003

## தூய சிந்தையில் இருக்கும் மாயவன்



"உள்ளுவார் உள்ளத்தாய்" என்று ஸ்ரீநாராயண மூர்த்தியை திருமங்கையாழ்வார் பாடுகிறார்.

உள்ளங்கவர் கள்வன் என்பது ஞானசம்பந்தர் திருமுறை உள்ளம் பெருங்கோயில் என்கிறார் திருமூலர். இறைவன் எவர் நினைகிறார்களோ அவர்களின் உள்ளத்தில் இருந்து விடுவானாம். நினைப்பவர் மனம் கோயிலாய்க் கொண்டவன்.


பெருங்கள்வனாக, பக்தரட்சகனாக, மக்களின் நன்மை தீமைகளைக் கண்டு நெறிப்படுத்துபவனாக எம்மைக் காப்பவன் நாராயணப் பெருமான். அவருடைய செயலெல்லாம் நீதிவரம்பை நிலைப்படுத்துவன. எங்கே நீதியிருக்கின்றதோ அங்கே மகாலட்சுமி நாயகன் வீற்றிருப்பார். அநீதிக்கு எதிரியாக மாறுகிறான். தன்பக்தரை நீதிவழி நடத்துவதற்காக – எம்பெருமான் சொன்ன நீதிதான் பகவத்கீதை.

பாண்டவருக்கு தூதாகச் சென்ற பெருமான், விதுரன், திரு தராட்டினன் இவர்களைச் சந்தித்துக் கொண்டு துரியோதனிடம் சென்றார். அவரை உபசரித்த துரியோதனன் அமுதருந்துவதற்கு அழைத்தான். அதற்குக்கண்ணன் சொன்னது "துரியோதனா யான் பாண்டவர் தூதுவன். தூதுவர் காரியம் முடியுமுன் உண்பதில்லை. நீ பாண்டவரின் எதிரி, ஆனால் பாண்டவர்கள் என்னுடைய பிராணன்கள். என் அன்பர்களை பகைத்தவர்கள் என்னைப் பகைத்தவர் ஆவார். எவன் ஆசையும் கோபத்தையும் கொண்டு குணவானை விரோதிக்கின்றானோ, அவனுடைய அன்னம் உண்ணத்தக்கதன்று. மனத்தையும் கோபத்தையும் ஜெயிக்காமல் எவன், நற்குணமுள்ள தாயாதிக ளைப் பகைக்கிறானோ அவன் வெகுகாலம் செல்வத்துடன் வாழ மாட்டான். அத்தகையோர் தரும் அன்னம் உண்ணக்கூடிய தன்று."

மேற்படி வாசகத்தால் நாமுணரக்கூடியது என்னவெனில், ஆசையும் கோபமும் – விரோதத்தை உண்டாக் கும். அவர்கள் தரும விரோதிகள் தூயசிந்தையற்றவர்கள் என்பதே. இவ்விதம் ஞானம் பேசும் பெருமான், அளவெட்டி நாகேஸ்வரத்தில் நாகவரத நாராய ணர் என்னும் பெயரோடு வீற்றிருக்கின்றார். இன்று (20.08.2003) புதன் கிழமை தேரேறி வருகின்றார். இறந்த பாலனை உயிர்பெறச் செய்தமை, துாபிவழியாக,

(கடுங் கோடைகாலத்தில்) ஒருவாரகாலம் தீர்த்தம் பெருகச் செய்து பல மக்களின் நோய் தீர்த்தமை முதலாய அற்புதங்கள் செய்த பெருமானைத் தேரிற்கண்டு இஷ்டசித்திகள் பெறலாம். அடியார்கள் வந்து தரிசனை செய்து திருவருள் பெறுவீர்களாக. கேட்டவரம் தருவான். கிருஷ்ண ஜெயந்தி வீதியுலாக்காணுங்கள்.

**அருட்கவி. சீ. விநாசித்தம்பி M.A.**



## பிரதம குருவின் ஆசி



அற்புத மூர்த்தி
''பணிநெஞ்சேநாளும் பரம
பரம்பரனை
பிணியொன்றும் சாரா'' என்று
நம்மாழ்வார் பாடுகிறார்.

அளவெட்டி நாகேஸ்வரத்திலிருக்கும் ஸ்ரீ நாகவரத நாராயணனைப்பல காலம் பூசித்து வருகிறேன். நேரிற் பேசும் தெய்வமாகக் கருணை மழை பொழிகிறார். சிவனாகவும் கண்ணனாகவும் காட்சி தருகிறார். பல்லாயிரம் மக்கள் சந்தானச் செல்வம் பெற்றதை அவரது தேர் விழாவன்று பல பெண்கள் குழந்தைகளை ஏந்திய வண்ணம் பெருமானுக்குக் காட்டி ஆனந்தக்கண்ணீர் விடுவது மூலமாக அறியலாம். அங்கப்பிரதட்சணம், காவடி, அடியழித்தல், தீச்சட்டி ஏந்துதல் யாவும் நேர்த்திக்கடனாக, வீதியெல்லாம் நிறைந்திருப்பதைக் காண உள்ளங்குளிரும்.

இரண்டு பாம்புகளாகக் காட்சி காட்டி கோயில் கொண்ட ஸ்ரீ நாராயண மூர்த்தியை வந்து தொழும் அடியார்கள் எல்லாம் மனங்குளிர்ந்து இஷ்டசித்தி பெறுவார்களாக எனப் பிரார்த்தித்து ஆசிகூறுகின்றேன்.

**பரம. சண்முக சுந்தரக்குருக்கள்**
**ஆலய பிரதம குரு.**

## நாகவரத நாராயணனே தேரிலே காட்சி தாராய்!

நாகவரத நாராயணனே நமக்கருளும் நாயகனே
அளவையூர்ப் பதியமர்ந்த கேசவனே மாதவனே
சோக வாழ்வை நீக்கி சொர்க்க வாழ்வைத் தருவாயே।
கோவிந்தா கோபாலா கோவர்த்தன கிரி நாதனே
தாக சாந்திக்காக வெண்ணெய் திருடிய மாயவனே
கண்ணா மணிவண்ணா குழலூ தும் கோகுலனே
காகமாய் வந்தவனுக்கும் கருணை காட்டிய கண்ணனே
தேரிலே வந்தெமக்கு நேரிலே காட்சி தாராய்।

**கவிமணி, சிவநெறிக்கலாநிதி**
**இராசையா ஸ்ரீதரன்.**

## ஸ்ரீநாதவரத நாராயணர் ஆலயத்தின் பூர்வீக வரலாறு

அளவெட்டியில் வாழ்ந்தவர்கள் சங்கானைக்கு போகும் நடைபாதையில் பெரும் பற்றைக்காடாக இருந்த இப்பகுதியில் வனவிலங்குகளும் அதற்கு அதிகமாக வளர்ப்பு மிருகங்களும் எதேட்சையாக மேய்ந்து திரியும் இவ்விடத்தில் முதியோர்களால் ஒரு கேணி வெட்டப்பட்டது. கால்நடைகள் இக்கேணியில் நீர் குடித்து வந்தன. சுமார் 200 வருடங்களுக்கு முற்பட்ட வரலாறு இக்கேணியடியில் கோயில் கொண்ட ஸ்ரீநாகவரத நாராயணனின் அற்புதங்களை எமக்குக் காட்டுகின்றன. பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு அன்பர் இப்பாதையில் வரும்போது கேணியடியில் இருந்த புற்றின் மேல் இரண்டு நாக பாம்புகள் படம் எடுத்தவாறு ஆடின அசைந்தன. இப்படியே நாளாந்தம் பலர் கண்டனர். இதன் அருகே ஒரு நாள் ஒரு பாலகனும் காட்சி கொடுத்தான். சில நாள்களின் பின்னர் ஒரு நாகபாம்பு மட்டும் காட்சி கொடுத்தது. இவ்வாறான பழைமையும் புதுமையும் மிக்க இடத்தில் அமைந்த ஸ்ரீ நாகவரத நாராயணனுக்கு இன்று தேர் விழா. அளவையிலே நாகவரதனுக்கு காலையிலே தேராம்। மாலையிலே மாயவனுக்கு வெண்ணெய்த் திருவிழாவாம்। அல்லும் பகலும் அன்பர்களுக்கு அருளும் அற்புதமும் புரிந்து சொந்த மண்ணில் தந்திரமாய் வாழ வரம் அருள அருள் தர வண்ணத் தேரில் இன்று வீதி வலம் வர அதைக் காண அருள்பெற அன்பர்கள் அலைமோத வேண்டும.

**அளவையூர் கி. பிரியா**
**(தொண்டர்சபை சார்பாக)**

அளவை நாகேஸ்வரத்தில்
ஆலயம் கொண்ட கண்ணா,
களவாடி வெண்ணெய் உண்ட
காகுப்தா எமக்குத் துன்பம்
விளையாமல் காப்பாய் ஐயா,
விஷ்ணுவே போற்றி போற்றி.

ஆவணி ஜயந்தி நாளில்
ஆனந்தத் தேரிலேறி
நாவலோர் பாட்டிசைக்க
நான்மறை முழங்க – தேவ
தேவனே வீற்றிருந்தாய்.

நாட்டிலே சமாதானம் – நல்
நவநிதி வளங்களோங்க
கூட்டிய வறுமை நீங்க
குறைவிலா துயிர்கள் வாழ – எந்தன்
பாட்டினைக் கேட்டு வந்து
பக்தருக் கருளுவாயே।

**அளவையூர்**
**தி. வரதவாணி**


## நாகவரத நாராயணரின் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :

எழில்மிகு ஆபரணங்களின் எழிலகம்
**சிறி நதியா நகை மாளிகை**
இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நங்கையர் நாளும் விரும்பி நாடும் நகையகம்
**அசோகா நகை அகம்**
இல.111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்றும் மாறா 22 கரட் ஆபரணங்களைப் பெற
**நியூ நகுலா ஜுவல்லரி**
இல.74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அழகிய தங்க ஆபரணங்களின் கலையகம்
**அர்ச்சனா ஜுவல்லர்ஸ்**
(பட்டம் வெட்டும் நிலையம்) 176/1. நாவலர் வீதி.
இல.118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மனம் விரும்பி சுவைத்திட
**கல்யாணி கிறீம் ஹவுஸ்**
இல.73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நவ நாகரீக ஆடைகளின் தெரிவிற்கு
**சீமாட்டி புடைவை அகம்**
இல.122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

படப்பிடிப்புக்கும் பத்திரிகைகளுக்கும்
**கிருபா போட்டோ**
அளவெட்டி, மல்லாகம்.

பல்பொருள் வாணிபம், பத்திரிகை முகவர்
**ஜீவா ஸ்ரோர்ஸ்**
உரிமையாளர்: மு.ரஞ்சன்
கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.

அழகிய தங்க நகைகளுக்கு நாடுங்கள்:
**சிவன் நகை மாடம்**
உரிமையாளர்: நா.சிவராசா
கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.

நல்ல தரமான பொருள்களுக்கு
**பரணி பல்பொருள் களஞ்சியம்**
பழைய நீதிமன்ற வீதி, மல்லாகம்.

~பல்பொருள் வாணிபம்~
**விநாயகர் களஞ்சியம்**
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.

சுத்தமான உணவு வகைகளுக்கு
**விநாயகர் சைவ உணவகம்**
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.

நல்ல ரகமான பொருள்களுக்கு
**கணபதி ஸ்ரோர்ஸ்**
உரிமையாளர்: ச.சுப்பிரமணியம்
செட்டிச் சோலை, அளவெட்டி வடக்கு, அளவெட்டி. (பல்பொருள்- பத்திரிகை முகவர்)

நல்ல பொருள்களுக்கு நாடுங்கள்:
**K.R. பல்பொருள் வாணிபம்**
நிரு மெடிக்கல்ஸ், அளவெட்டி.

**லிங்கம் மோட்டோர்ஸ்**
11.கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

**இணுவில் பத்திரிகை முகவர்**
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

**சாரங்கா நகைமாடம்**
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். ☎-2480

**சாரங்கன் நகைமாடம் அன் சென்ரர்**
45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். ☎-6059

**சிவமகாலட்சுமி நகையகம்**
176, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ முருகன் நகை மாடம்**
சங்கரத்தைச் சந்தி, சங்கரத்தை.

**ஓம் முருகன் நகைமாடம்**
05, மானிப்பாய் வீதி, கைதடிச் சந்தி.

**வினோ நகைப் பூங்கா**
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**மதனா ஜுவல்லறி**
177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.